Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 07 செவ்வாய்க்கிழமை (20-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:114

## 9 வாக்குகளால் பட்ஜெட் நிறைவேறியது

கொழும்பு,மார்ச்20

நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வரும் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு நேற்றுப் பிற்பகல இடம்பெற்ற சமயம் ஒன்பது மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 115 வாக்குகளும், எதிராக 106 வாக்குகளும் கிடைத்தன.

ஐதேக., தமிழர் விடுதலைக் கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி,

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்:
# குடாநாட்டில் 29 பேருக்கு 10 'டி'; வேம்படி மகளிர் முன்னணியில்!

யாழ்ப்பாணம்,மார்ச்20

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 29மாணவர்கள் பத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

இந்த முடிவுகளின்படி வேம்படி மகளிர், யாழ்.இந்து, சென்.ஜோண்ஸ், சாவகச்சேரி இந்து ஆகிய கல்லூரிகள் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளன என முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பாடசாலைகளும் அவை பெற்ற முன்னணிப் பெறுபேறுகளும் வருமாறு:- (பத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் உட்பட)

★ வேம்படி மகளிர்:- 10டி - 8 பேர் (ஜெயந்தினி மகேந்திரன், சுகந்திகா சண்முகதாஸ், யாழினி செல்வலிங்கம், கௌசிகா மகாதேவா, யனோஜினி திரிலோகநாதன், யசித்தா ராமச்சந்திரன், நிருஜா

(12ஆம் பக்கம் பார்க்க)

## 4 ஈழத்தமிழர் கஸகஸ்தானில் கைது

லண்டன்,மார்ச்20

சட்டவிரோதமாக ஜேர்மனிக்குள் நுழைய முயன்றதாகக் கூறப்படும் 4 ஈழத்தமிழர்கள் நேற்றுமுன்தினம் கஸகஸ்தான் பகுதியில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாயில் இருந்து வாகனம் ஒன்றில் புறப்பட்ட இவர்கள், கஸகஸ்தானின் பவுலொடா நகரின் ஊடாக ஜேர்மனிக்குள் நுழைய முயன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-7)

## ஐரோப்பியத் தலைவர்களிடம் சந்திரிகா
# புலிகளின் விருப்பத்தை பிரதிபலிக்கும் அரசமைப்பு மாற்றத்துக்குத் தயார்!

## அவர்கள் ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட தீர்வுக்கு இணங்கினால்

லண்டன்,மார்ச்20

**ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தால், ஏற்கனவே முன்வைத்த அரசமைப்புச்சீர்திருத்த யோசனையை அவர்களின் விருப்பத்தை பிரதிபலிக்கத்தக்க வகையில் மாற்றி அமைக்கத் தயாராக உள்ளேன்.**

**ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களை பிரசெல்ஸில் சந்தித்த வேளை அவர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்படித் தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க மூன்று வழி முறைகளை பின்பற்ற உள்ளேன். விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த முன்முயற்சிகளை எடுத்தல், அழிந்து போயிருக்கும் வடக்கை மீளக் கட்டியெழுப்ப இயலுமான அளவு அபிவிருத்தி செய்தல், அதிகாரப் பரவலாக்கலை அறிமுகம் செய்தல் ஆகியவையே அந்த வழி முறைகளாகும்.

அரசமைப்பு யோசனைகள் மூலம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை வலியுறுத்தி
# தெருக்கூத்தில் நடித்த சிங்கள இளைஞர்கள் கைது!
### வாழைச்சேனையில் சம்பவம்

மட்டக்களப்பு,மார்ச்20

வாழைச்சேனையில் சமாதானத்தை வலியுறுத்தி தெருக்கூத்து நடத்திய சிங்கள இளைஞர்களை கைது செய்த படையினர் அந்தத் தெருக்கூத்தை நடத்துவதற்கும் தடை விதித்தனர்.

அநுராதபுரம் சமாதான சபை அலுவலகத்தைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்று சமாதானத்தை வலியுறுத்தி நேற்று வாழைச்சேனையில் தெருக்கூத்து ஒன்றை நடத்தியது. அதில் இராணுவ வீரர்களாக நடித்த நால்வர் இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்துக்குச் சென்றிருந்த வேளை
# ஜனாதிபதி சந்திரிகாவை கைது செய்து விசாரிக்குமாறு சர்வதேச நீதிமன்றில் மனு!

ஸ்ரொக்ஹோம்,மார்ச்20

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நெதர்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளை-

அவரைக் கைது செய்து விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று கோரி அங்குள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அங்குள்ள ஈழ அகதிகள் இருவர் அந்நாட்டின் பிரபல சட்டத்தரணி ஹேரண்ட் மூலம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஸ்ரீலங்காவில் வாழும் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள், துன்புறுத்தல்கள் ஆகியவற்றுக்கு ஜனாதிபதி சந்திரிகாவே உடந்தையாக இருக்கின்றார். அவரைக் கைது செய்து அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவிலுக்குத் தெற்கே
# புலிகளின் 'பங்கர்'கள் அழிக்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு,மார்ச்20

நாகர்கோவிலுக்குத் தெற்கே அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் 'பங்கர்'களை கடந்த சனிக்கிழமை படையினர் தாக்கி அழித்துள்ளனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

சிறு ஆயுதங்கள் கொண்டு இந்தத் தாக்குதலைப் படையினர் மேற்கொண்டனர் என்றும் -

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் ஆறு உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் -

மூன்று படையினர் காயமடைந்தனர் என்றும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

நேற்று முன்தினம் அரியாலை

(12ஆம் பக்கம் பார்க்க)



மீன்பிடிக்கும் நேரத்தையும் தூரத்தையும் அதிகரிக்குமாறும், கடலில் சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்குமாறும் கோரி நேற்று வடமராட்சி கடற்றொழிலாளர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்னால் கடற்றொழிலாளர்கள் திரண்டு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததைப் படங்களில் காணலாம். (செய்தி மற்றும் படங்கள் உள்ளே). (க)

*(படங்கள்: வடமராட்சி செய்தியாளர்)*

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மாவட்ட கவர்ணரின் உத்தியோகபூர்வ விஜயமும் வருடாந்த மதியபோசன ஒன்றுகூடலும்

*காலம்:* இன்று (20.03.2001) செவ்வாய்க்கிழமை

*நேரம்:* முற்பகல் 11.00 மணி

*இடம்:* யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதி O.P.D. முன்பாக)

பிரதம விருந்தினர்:
**லயன் ரொகித்தா உடவத்த** M.J.F.
(மாவட்ட கவர்ணர் - 306B)

கௌரவ விருந்தினர்:
P.D.G.**லயன் K.தில்லைநாதன்** M.J.F.
(மாவட்ட ஆலோசகர்)

பிரதேசம் 09 - வலயம் 1, வலயம் 2 வலயத் தலைவர்கள் பிரதேசம் 10 - மாவட்டம் 306B வலயம் 1 தலைவர்கள் ஆகிய இவர்கள் இந்த வைபவத்தில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைப்பு விடுக்கின்றனர்.

*குறிப்பு: அனைத்து லயன்ஸ் கழக உறுப்பினர்களும் இந்த வைபவத்துக்கு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

(C/15798)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.இளையப்பு கிருபாகரசூரியன்

வடமராட்சிப் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரியாகவும், யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகவும் நேற்று (திங்கள்) காலை, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் திரு. எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ள பத்திரிகையாளரான புலோலி கிழக்கு, திரு. இளையளப்பு கிருபாகரசூரியன் அவர்களின் சேவை மேலும் சிறப்புற்று தொடரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிரம்மஸ்ரீ அ.பிரேமச்சந்திரக்குருக்கள் ஜே.பி.
*துன்னாலை.* குடும்பம். (85640)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய
பிரதி அதிபர்

### திரு. ச.வாமதேவன் அவர்கள்
(Spe. Ma.Trd, S.L.P.S. 2-1)

அதிபர்தரம் 2-1 இற்கு பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று மேன்மையுறவேண்டும் என உளமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யாழ்/கோண்டாவில் இராமகிருஷ்ண
மகாவித்தியாலயம்.
(85631)

## மரண அறிவித்தல்

### இராசக்கோன் யோகானந்தன்

சரசாலையைப் பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டி அரச தொடர்மாடியை வதிவிடமாகவும் கொண்ட உதவி சுங்கப் பணிப்பாளர் இராசக்கோன் யோகானந்தன் கொழும்பில் 19.03.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(C/15801)
தகவல்:
சி.சபாநாதன்.

## யாழ்.நகரக் கடையில் பகல் வேளையில் ஓடு பிரித்துத் திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்.கே.கே.எஸ். வீதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றினுள் கடந்த ஞாயிறு நண்பகல் வேளை ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்து பெறுமதி மிக்க பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

டெக்,சி.டி.கசற் மற்றும் பெறுமதி மிக்க பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(க-7)

## கட்டடத் தொழிலாளி படுகாயம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

கட்டட வேலை செய்துகொண்டிருந்தவர் மீது 'சிமெண்ட் பிளாற்' விழுந்ததில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அராலி கிழக்கைச் சேர்ந்த வீரசிங்கம் பழனியாண்டவர் என்ற குடும்பஸ்தரே கையிலும், முதுகிலும் காயமடைந்தவராவார். (க-6)

## 'பன்டேஜ்' இல்லை

ஊர்காவற்றுறை,மார்ச்20

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் மருந்து கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் 'பன்டேஜ்' முடிவடைந்துவிட்டது.

இதனால் வைத்தியசாலைக்கு மருந்து கட்டுவதற்கு வருபவர்களை தனியார் கடைகளில் 'பன்டேஜ்' வாங்கி வருமாறு ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரால் பணிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-16)

## நல்லின விதைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்.மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லின மரக்கறி விதைகள் மற்றும் பயறு, கௌப்பி உழுந்து போன்ற விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நல்லின விதைகளை உற்பத்தி செய்து, அவற்றைப் பராமரித்து, விவசாய விரிவாக்கங்கள் ஊடாகவும் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகள் ஊடாகவும் நேரடியாகவும் விநியோகிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

ராஜா
யாழ்ப்பாணம்
(C/15741)
11 அக்கடமி அவாட் பெற்ற
சிறந்த படம்
டைட்டானிக்
தமிழில்
மாணவர்களும் படக்காட்சி பார்ப்பதற்கு கல்லூரி மூலம் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
30.03.2001 முதல்
வானத்தைப் போல

லஷ்சுமி இணுவில்
விஜயகாந்த் (3வேடங்கள்)
மந்த்ரா, செந்தில்
நடித்த
சிம்மாசனம்
(C/15796)
(நில்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

நாகம்ஸ்
சுன்னாகம்
பிரசாந்த், தேவயானி,
பிரகாஷ்ராஜ் நடித்த
அப்பு
(85458)
(நில்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
21 முதல்
காதலர் தினம்

## மரண அறிவித்தல்கள்

### கிருஸ்ணபிள்ளை இராஜேந்திரம்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை இராஜேந்திரம் 15.03.2001 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை பராசக்தியின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் (ஆச்சிக்கிளி - ஜேர்மனி) அன்புக் கணவரும், நல்லையா, பொன்னம்மாவின் (ஜேர்மனி) மருமகனும், காலஞ்சென்ற குருமூர்த்தி சாஸ்திரியார் - இராமாசிப்பிள்ளையின் பேரனும், நாகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற இரத்தினகோபால் (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சி.செல்லத்துரை (S.A.செல்லையா அன் கொம்பனி), புவனேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை U.S.A.) ஆகியோரின் மைத்துனரும், லீலா, சுசீலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ரவீந்திரன், சிவகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிலக்ஷன், ஸ்ரோபானி, விலானி, டானியல், மெலினா ஆகியோரின் பாசமிகு பாட்டனும், ஞானம்பாள் (கொழும்பு), மருதலிங்கம் (பேர்லின்), சகுந்தலாதேவி (கொழும்பு), கனகசுந்தரம் (கனடா), கேதீஸ்வரன் (சுவிஸ்), யோகேஸ்வரன் (சுவிஸ்), அகிலேஸ்வரி (ஜேர்மனி), இராசேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், இராசையா (கொழும்பு), சிவசோதி (பேர்லின்), பாலசிங்கம் (கொழும்பு), திருமதி கனகசுந்தரம் (கனடா), யோகேஸ்வரி (சுவிஸ்), வசந்தி (சுவிஸ்), கனகசபாபதி (ஜேர்மனி), சற்குணராஜா (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும், காலஞ் சென்றவர்களான சிவப்பிரகாசம், ஏரம்பமூர்த்தி, விநாயகமூர்த்தி, இராசையா மற்றும் கணேசமூர்த்தி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை மற்றும் அன்னபூரணம் (பிரபல சோதிடர்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21-03-2001) புதன்கிழமை ஜேர்மனியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு - 6* (85632)
தகவல்:
செ.இலட்சுமணன்
செ.புலேந்திரன்

### திருமதி அருணாசலம் அமிர்தாம்பிகை
(அருமை -பளை)

புலோப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் துன்னாலை வடக்கு, கரவெட்டியைத் தற்காலிக வசிப்பிடமாககவும் கொண்ட திருமதி அருணாசலம் அமிர்தாம்பிகை(அருமை) அவர்கள் கடந்த (17-03-2001) சனிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும் யோகராணி, இராசாம்பிளை (அதிபர், பளை றோ.க.த. பாடசாலை), அரியதேவி (ஜேர்மனி), தெய்வேந்திரம் (ஜேர்மனி), லோகநாதன்(லண்டன்), லோகபாலேந்திரன் (கனடா), வஜஞாம்பிகை (விஜி-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராசா, குமாரவேலு(சமாதான நீதிவான், பளை), வண்ணை ஆனந்தன் (ஜேர்மனி), கிருஷ்ணகுமாரி (ஜேர்மனி), கிருஷ்ணவாணி (கனடா), கருணாநிதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வாகீசன் (லண்டன்), கௌரீசன் (லண்டன்), நிறஞ்சன், யாசோதரா (மாணவி, பளை ம.கல்லூரி), தமிழ்வேந்தன் (ஜேர்மனி), சாகித்தியன் (கனடா), நிரோஜன், காலஞ்சென்ற கோபிநாத், ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-03-2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துன்னாலை ஓடைக்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.*
நிரந்தர முகவரி: பளை
தகவல்:
திரு.திருமதி குமாரவேலு.
(85639)

### திருமதி நடராசா சிவகாமசுந்தரி

திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி நடராசா சிவகாமசுந்தரி (18.03.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் நடராசா(National Bank of India) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி இராமலிங்கம் லீலாவதி, காலஞ்சென்றவர்களான நடராசா(முன்னாள் பதிவாளர், மேல் நீதிமன்றம்), கனகசபை தேவசுந்தரி மற்றும் செல்வி கமலாவதி செல்லத்துரை (ஆசிரியை, முத்துத்தம்பி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2001) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11.00 மணிக்கு (பு.நே.) தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பலாலி வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
(85645)
தகவல்:
செல்வி கமலாவதி செல்லத்துரை
(சகோதரி)

### அந்திரேஸ்பிள்ளை மேரி திரேசம்மா

பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும், கிளிநொச்சி, கோணாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அந்திரேஸ்பிள்ளை மேரி திரேசம்மா 15.03.2001 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சுவக்கீம்பிள்ளை அந்திரேஸ்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான யேசுதாசன், ஜெயதாசன், மேரி மாகிறேற், விமலதாசன் (பத்திராதிபர், 'மனிதன்') மற்றும் தார்சி லம்மா (ஆசிரியை, கோணாவில்), எலிசபேத், பத்மதாசன் (கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களம்), பாலதாசன்(கோப்பாய்), ஜெயநேசம் (கனடா), அருட்தந்தை சகாயதாசன், தேவதாசன் (ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி), அக்னெஸ்(நோர்வே), வெலிசிஸ் (ஆசிரியை, வவுனியா), தேவசகாயம் கார்மலா(ஆசிரியை, கோணாவில்), அமலதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அன்னம்மா, அருளம்மா, விக்ரோறியா, காலஞ்சென்றவர்களான இராயப்பு, ஆரோக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஜீவன், தர்மினி, றொய்ஸ்ரன், சுபேந்தினி, தர்சினி, யேசன், றுமேஸ், டினேஸ், ரங்கேஸ், ரோஷன், கெனடி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 18.03.2001 கோணாவிலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*27, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(85642)
தகவல்:
அ.பத்மதாசன் (மகன்)

# உதயன்

## இரட்டை முனைத் தன்மை உதவுமா?

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் பட்சத்தில், புதிய அரசமைப்பு நகல் யோசனைகளே அதற்கான அடிப்படையாக இருக்க வேண்டும் என்றே அரசாங்கம் விரும்புகிறது.

இந்தத் தகவலை அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் வெளியிட்டிருக்கிறார்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவாக இருந்த போதிலும், விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளையும் கவனத்துக்கு எடுத்து நியாயமான விட்டுக் கொடுப்புகளுடன் பேச்சுக்களை நடத்த ஆயத்தமாக இருக்கிறோம் — என்றும் பேராசிரியர் பீரிஸ் சொல்கிறார்.

அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நிற்கவில்லை. விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளையும் பரிசீலிக்கத் தயாராக உள்ளது என்று கூறிய அமைச்சர் பீரிஸ் —

பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு விட்டால் இடை நடுவில் முறிந்து விடும் சாத்தியம் இம்முறை இல்லை என்றும் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளார்.

கைதேர்ந்த மூன்றாந்தரப்பு தற்போதைய சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் கைகொடுக்க முன்வந்துள்ளதால், பேச்சுக்கள் முன்னரைப் போல முறிவடைவதற்கு நியாயமில்லை என்றும் அவர் விளக்கியிருக்கிறார்.

அரசாங்கத் தரப்பிலிருந்து, சமாதானப் பேச்சுக் குறித்த நம்பிக்கையான, ஆக்கபூர்வமான தகவல் வெளி வந்திருப்பது குறித்து சமாதான விரும்பிகள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று பல தரப்பினரும் மனத்திருப்தி கொள்வர்,

பேராசிரியர் பீரிஸ் சமாதானப் பேச்சுக்களுக்கும் தீர்வுக்கும் ஆதரவாளர் என்பதால் அவர் நிலைமைகளைச் சாதகமாகப் பார்க்கிறார். ஆனால் அரசாங்கத்தில் பதவி வகிக்கும் வேறு பலர் யதார்த்தம் புரியாதவர்களாக, நாட்டு நலன் கருதாமல் இன்னமும் பேசுகிறார்கள்,

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மற்றொரு பேராசிரியர் ''கறுப்புக் கண்ணாடி'' போட்டவர். போரில் அரசு வெற்றி பெறுவதற்கு படைகளை வலுப்படுத்த வேண்டும். போரை முடிவுக்குக் கொண்டு வந்தாலே பொருளாதார நெருக்கடியைக் குறைக்க முடியும் — என்று கூறுகிறார்.

போரை நிறுத்திப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து சமாதானத்தைக் கொண்டு வருவது தான் சிறந்த மார்க்கம் என்பது விஞ்ஞானத்துறை அமைச்சர் பேராசிரியர் வெஸ்லி குணவர்த்தனாவுக்குத் தெரியவில்லை. அவரவர் போடும் கண்ணாடியைப் பொறுத்து அந்தந்த வர்ணங்களில் பொதுவான காட்சிகள் வேறு விதமாகத் தெரிவதுண்டு.

அதிகரித்துள்ள பாதுகாப்புச் செலவினத்தைக் கட்டுப்படுத்த முடியாமற் போய்விட்டால் பொருளாதாரத்தில் மீட்சிபெற முடியாது என்று கூறிக் கொண்டே, போரில் வெற்றி பெறவேண்டும் என்று கூறுகிறார்- இந்த முரண்பட்ட கருத்துக்களைக் கேட்டு அழுவதா அல்லது சிரிப்பதா?

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தங்கள் ஒருபுறம் நடைபெறுகின்றன. ஆயுத தளபாடங்கள் இன்னொரு புறத்தில் இறக்கப்படுகின்றன. இந்த இருதுருவ — இரட்டை முனைத் — தன்மை அமைச்சர்கள் மத்தியிலும் காணப்படுகிறது. அவ்வாறாயின் தீர்வும், சமாதானமும் வரும் என்று எவ்வாறு நம்புவது?

## கும்பாபிஷேகம்

அராலி வடக்கு — மயிலியற்புலம் கந்தசுவாமி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் இடம்பெறவுள்ளது.

22 ஆம் திகதி காலை 6 மணி முதல் சமயக்கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறும். (க-7)

## யாழ். சட்டத்தரணிக்கு கனடா நிறுவனத்தின் 'சக்தி விருது'

யாழ்ப்பாணம், மார்ச் 20

கனடா நாட்டின் ''சீடா'' நிறுவனம் யாழ். சட்டத்தரணி திருமதி சரோஜினிதேவி இளங்கோவனுக்கு ''சக்தி விருது'' வழங்கிக் கௌரவித்துள்ளது.

பெண்களுக்கான இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கி திறம்படச் செயலாற்றியமைக்காகவே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான கனடா நாட்டின் தூதுவர் ரூத் ஆச்விபோல்ட் அண்மையில் கொழும்பில் கனடா இல்லத்தில் வைத்து இந்த விருதினை வழங்கினார்.

இதேவேளை 'சக்தி விருது' பெற்ற யாழ். சட்டத்தரணி திருமதி சரோஜினிதேவி இளங்கோவனைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (க-7)

## தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 20

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ், நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட ஏழு சந்தேக நபர்களை ஏப்ரல் 3 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

நல்லதம்பி கேதீஸ்வரன் (பூநகரி), கந்தசாமி லோகேஸ்வரம் (நல்லூர், பூநகரி), பாலசுந்தரம் கோபாலகிருஷ்ணன் (இராமநாதபுரம் – கிளிநொச்சி), கிருஷ்ணபிள்ளை ஸ்ரீ ஆனந்தரூபன் (இராமநாதபுரம்), ரட்ணம்ராஜா (இரணைமடு), தம்பையா தயாபரன் (இராம நாதபுரம்), தேவராசா கிதபொன்கலன் தங்கராசா (வட்டக்கச்சி) ஆகியோரே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர். (ம-5)

## பொதுச் சந்தை திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 20

கோப்பாய் வடக்கு பொதுச் சந்தையின் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நா. சிவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன், வலி. கிழக்கு பிரதேச சபையின் உப தலைவர் யு. எல். ஏ. ரவி, செயலாளர் செ. குகதாசன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-10)

## நாளை

பங்குனி 8

புதன்கிழமை

திதி: துவாதசி பின்இரவு 2. 30 வரை.

நட்சத்திரம்: திருவோணம் மு.ப.1 10-13 வரை.

சுபநேரம்: 4.48 — 6.18

ராகுகாலம்: 12.18 — 1.48

(பழைய நேரப்படி)

# அரசு–புலிகளின் இடைவெளியை இந்தியாவால் குறைக்க முடியும்

## பெஷாஹாவர் நகரில் பிரதமர் ரத்னசிறி

பெஷாஹாவர், மார்ச் 20

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் இடைவெளியைக் குறைப்பது என்பது இந்தியாவுக்குப் புதியதொரு விடயமல்ல என்றும் நாட்டில் விடயங்கள் எவ்வாறு மாற்றம் பெற்றது என்பதை அவர்கள் (இந்தியா) அறிவார்கள் எனவும் பிரதமர் இரத்னசிறி விக்கிரமநாயக்க பாகிஸ்தானின் பெஷாஹாவர் நகரில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் பெஷாஹாவர் நூதனசாலைக்கு வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்டார்;

அங்கு இலங்கைப் பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே இடைவெளியைக் குறைப்பதற்கான அதாவது பலாமாகச் செயற்படுவதற்கு இந்தியா ஆற்றக்கூடிய பங்களிப்பின் சாத்தியம் பற்றிக் கேட்கப்பட்டபோது இந்தியாவுக்கு இது புதிய விடயமல்ல எனவும், அதேசமயம் இலங்கை தனது இறைமையைப் பாதுகாத்துக்கொள்ளும் எனவும் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் பற்றிக் கேட்கப்பட்டபோது; விடுதலைப் புலிகளுடன் நோர்வேக்கு நேரடித் தொடர்பு கிடையாது எனவும் இனரீதியில் தனிநாடு கோருவதை புலிகள் கைவிட்டால் நாட்டுக்கு அது சிறப்பான விடயம் என்றும் தெரிவித்துள்ளார்

''தனிநாட்டுக் கோரிக்கையை'' புலிகள் கைவிட்டு இலங்கையின் இறைமையை ஏற்கவேண்டும் என்பதை முதலிலேயே நோர்வே அரசுக்கு நாம் தெரிவித்துவிட்டோம். ஏனைய விடயங்கள் தொடர்பாக பேசித் தீர்க்கலாம் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்வதேச சமூகம் விடுத்த பல்வேறு வேண்டுகோள்களையும் உதாசீனம் செய்த ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர் வரலாற்றுப் புகழ் வாய்ந்த புத்தர் சிலைகளை அழித்துவிட்டமை குறித்தும் பிரதமர் கவலை தெரிவித்திருக்கிறார்; (க)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். கலட்டி மெ. மி த. கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை அதிபர் என். விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேசசபைத் தலைவர் எஸ். மணிபல்லவராஜன் (நிசாந்தன்) பிரதம விருந்தினராகவும் நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவஸ்ரீ சி. இரவீந்திரசர்மா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-7)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மார்ச் 20

வலிகாமம் கல்வி வலய கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்றுவந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் நாளை புதன்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவிருக்கின்றன.

இன்று காலை 8-30மணிக்கு ஆரம்பமாகும் 3 ஆம் இடத்துக்கான ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. அதில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 17 வயது — சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயம்.

★ 19 வயது — சண்டிலிப்பாய் இந்து எதிர் சங்கானை சிவப்பிரகாசம் வித்தி

நாளை பிற்பகல் 1-30 மணி முதல் இடம்பெறும் இறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 17 வயது — ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி. எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

★ 19 வயது — மகாஜனா எதிர் யூனியன்; (க-3-68)

## செயலமர்வு

தென்மராட்சி மார்ச் 20

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் விவசாய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் செயலமர்வுகள் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் இதே பாடசாலையில் நடைபெறும் என்றும் வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

### 105 கிராம அலுவலர் பிரிவுகள் படையினர் வசம்:

# குடாநாட்டில் குடிசன மதிப்பீடு நடத்துவதில் பல்வேறு சிரமங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையிலிருக்கும் 105 கிராம அலுவலர் பிரிவுகளில் குடிசனமதிப்பீடு நடத்துவதில் பல்வேறு சிரமங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடிசன மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளமையினால் குடிசன மதிப்பீட்டைச் சரிவர மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ். மாவட்த்தில் 435 கிராம அலுவலர் பிரிவுகளில் 330 பிரிவுகளில் மட்டும் மக்கள் வசிக்கிறார்கள். ஏனைய 105 பிரிவுகளும் படையினர் வசம் இருப்பதுடன் அங்குள்ள மக்களும் இடம் பெயர்ந்துவிட்டனர்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் தலா இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளிலும் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும், வடமராட்சி கிழக்கில் 13 கிராம அலுவலர் பிரிவுகளிலும் வலிவடக்கில் 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இருந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை இராணுவ நடவடிக்கையினால் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள வீடுகள், கட்டடங்கள் பெரும் எண்ணிக்கையில் சேதமடைந்த நிலையில் இருப்பதால் இவற்றை எல்வாறு இந்தக் குடிசன மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்வது என்பது பற்றி தெளிவான முடிவுகள் எதுவும் எடுக்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-5)

## தடுப்புக் காவலிலுள்ள 20 பேரின் விவரத்தைப் புலிகள் வெளியிடுவர்

யாழ்ப்பப்பாணம், மார்ச் 20

தமது தடுப்புக் காவலில் இருப்பவர்களில் 20 பேரின் பெயர் விவரங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் இம்மாத இறுதிக்குள் விடுதலைப் புலிகள் கையளிக்கவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த 20 பேரின் பெயர், விவரங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளித்ததும் அதன் பிரதிகளை யுத்தத்தின்போது காணாமற் போயுள்ள படை வீரர்களின் பெற்றோர் சங்கத்துக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்ற விடுதலைப்புலிகள் தமது தடுப்புக் காவலில் இருந்த நான்கு விவசாயிகளைக் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்தது குறிப்பிடத்தக்கது; (ம-10 )

### உதயவாக்கு

நல்ல மனிதனின் இதயம் இந்த உலகில் ஆண்டவனுடைய ஆலயம்.

## விபத்துக்களில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

மோட்டார் சைக்கிள் விபத்துகளில் காயமடைந்த இருவர் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் நேற்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் மேற்கைச் சேர்ந்த செல்வராசா கிருஷ்ணன் (வயது-36) என்ற குடும்பஸ்தர் நேற்று முன்தினம் கந்தரோடையில் நடந்த விபத்தில் காயமடைந்தார்.

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தர்மசாமிப்பிள்ளை அன்ரனி யாழ்ற்றன் (வயது - 20) என்ற இளைஞர் மண்டைதீவில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தார். (க-6)

# சமாதான முயற்சிகளுக்கு இந்தியா எவ்விதத்திலும் இடையூறாக இல்லை

## நோர்வே தூதர் வெஸ்ற்பேர்க் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 20

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நோர்வே அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. சமாதான முயற்சிக்கு எந்தவித முட்டுக்கட்டையும் இந்தியா போடவில்லை என்று இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்ற்பேர்க் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கடந்த வியாழக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது அங்கு விஜயம் செய்து இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங், வெளிவிவகாரச் செயலாளர் ஆகியோரைச் சந்தித்து விட்டு கொழும்பு திரும்பிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச றோட்டரிக்கழகம் நடத்திய சமாதானத்துக்கான உலக புரிந்துணர்வும் நல்லெண்ணமும் எனும் தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றும் போதே வெஸ்ற்பேர்க் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடைபெற்று வரும் இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும். உள்நாட்டில் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியமையினாலேயே நாம் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஏற்பாட்டாளராகச் செயற்பட முன்வந்தோம். எமது சமாதான முயற்சிக்கு அமெரிக்கா உட்பட பல நாடுகளும் உதவி வருகின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எமது சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இலங்கையில் சமாதான முயற்சி மேற்கொண்டது போல் பல நாடுகளிலும் நாம் சமாதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

எமது சமாதான முயற்சிக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்குகின்றது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் சமாதான முயற்சிக்கு எவ்வேளையிலும் ஆதரவு தருவதாகக் கூறியுள்ளார். இரு தரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்பதை இந்தியா விரும்புகின்றது — என்று கூறினார்.

(ம)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை அதிபர் திரு. மு. பரஞ்சோதி அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**முருகேசம்பிள்ளை சிவக்கொழுந்து**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலை விரிவுரையாளர் சமூகமும் மற்றும் ஆசிரிய மாணவர்களும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை

(85634)

## கண்ணீர் அஞ்சலி

பளை றோ. க. த. பாடசாலை அதிபர் திரு. ம. குமாரவேலு அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அருணாசலம் அமிர்தாம்பிகை**

(அருமை)

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரம் அடைந்தோம். அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பளைக் கோட்டக்கல்வி அதிகாரியும், அதிபர்களும்

(85635) பளைக் கோட்டம் பளை.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுக்கு 1915 — 07 — 15

விண்ணுக்கு 1996 — 03 — 15

**அமரர் ச. மயில்வாகனம்**

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

நினைவகலா ஐந்தாண்டுகளும்
கவலைகளும், துன்பங்களும்
எம்முடன் நிழல்போல் தொடர்கின்றன.
உங்கள் திருமுகமும், கனிவும்
பாலைவனப் பகந்தரையாகின.
எப்பிறப்பில் இனி நாம் காண்போமோ?
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.

36, கனகரத்தினம் வீதி,
அரியாலை மத்தி,
யாழ்ப்பாணம்.

(85615)

## வன்னிக்கான நிவாரணம் அதிகரிக்கப்படும்

வன்னியில் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாதோரின் புள்ளி விவரங்களைச் சமர்ப்பித்தால் ஜனாதிபதியுடன் பேசி நிவாரணம் வெட்டப்பட்டவர்களுக்கும் அதனை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஸ்ரீபதி சூரியாராட்சி உறுதியளித்துள்ளார் என்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் எஸ். சுந்தரம் தெரிவித்தார்.

வன்னியில் கடந்த ஜனவரி மாதம் உலர் உணவு பொருள்கள் வழங்கப்படுவோர் எண்ணிக்கை குறைக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்களது விவரத்தினை தனித்தனியான விண்ணப்பமாகப் பூர்த்திசெய்து தமக்கு வழங்குமாறும் —

அதற்குரிய நடவடிக்கையினைத் தான் மேற்கொள்வதாகவும் —

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தம்மிடம் உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார். (ம)

## மாணவர்களுக்கு பெற்றோர் பாராட்டு

யாழ்ப்பாணம் — பருத்தித்துறை நெடுஞ்சாலையின் வீதி ஒழுங்குக் கடமையில் ஈடுபட்டுவருகின்ற புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி மாணவர்களின் பணி மிகவும் மெச்சத்தக்கதாக இருப்பதாக அப்பகுதிப் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை ஆரம்பமாகின்ற காலை வேளையிலும் முடிவடைகின்ற மாலை நேரத்திலும் மாணவர்கள் இந்த ஒழுங்குக் கடமையில் ஈடுபட்டுவருவதனால் விபத்துக்களைத் தவிர்க்கக் கூடியவாறு இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடமையில் ஈடுபட்டு வருகின்ற இந்த மாணவர்கள் பாடசாலை நாள்களில் தினமும் கடமையில் ஈடுபட வேண்டுமெனவும், அதற்குப் பெற்றோர்களும், பொதுமக்களும் தமது ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர் (ம-10)

## விசாரணைக்கு அழைக்கப்பட்ட மேலும் 11 பேரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் புலனாய்வுப் பிரிவினர் மேலும் 11 பேர் தொடர்பான விசாரணைகளுக்காக அவர்களின் உறவினர்களை அழைத்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் யாழ். பொலீஸ் நிலையத்துக்குச் சமுகமளிக்கும்போது சம்பந்தப்பட்டவர் காணாமற் போன சமயம் அவரது பிரிவில் கடமையாற்றிய கிராம அலுவலரையும் அழைத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ கதிரவேலு விஜிதரன் (காணாமற்போனவர்) சரசாலை வடக்கு, சாவகச்சேரி அழைக்கப்பட்டவர்கள்:- மாரிமுத்து கதிரவேலு, கதிரவேலு அருந்தவநாயகம்

★ அரசமுடி கோமேஸ்வரன் (காணாமற் போனவர்) நாவற்குழி தெற்கு கைதடி. அழைக்கப்பட்டவர்: கோமேஸ்வரன் ஈஸ்வரி.

★ மகேந்திரன் கேதீஸ்வரன் (காணாமற் போனவர்) சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். அழைக்கப்பட்டவர்: சிவபாலசிங்கம் இரஞ்சிதமலர்.

★ ஜோசப் சுலீஸ்வரன் (காணாமற் போனவர்) 93/3, டேவிற் றோட், யாழ்ப்பாணம். அழைக்கப்பட்டவர்:— ஜோசப் அந்தோனிப் பிள்ளை

★ சுப்பிரமணியம் இராசலிங்கம் (காணாமற்போனவர்) மூளாய் சுழிபுரம், அழைக்கப்பட்டவர் — விஸ்னு, செல்வராஜா (சங்கானை).

★ கணேசலிங்கம் கிருபாகரன் (காணாமற் போனவர்) நாவற்குழி தெற்கு, கைதடி, அழைக்கப்பட்டவர்கள்:— இராமநாதபிள்ளை கண்ணதாசன், கதிரமலை கமலகண்ணன்.

★ பொன்னையா ஜெயராஜா (காணாமற்போனவர்) நாவற்குழி மேற்கு, அழைக்கப்பட்டவர்கள்:— பொன்னையாவின் மனைவி, தர்மராசா சந்திரவதனி, (சண்டிலிப்பாய் சந்தி)

★ சுப்பிரமணியம் முகுந்தகுமார் (காணாமற்போனவர்) பருத்தித்துறை வீதி, நல்லூர், அழைக்கப்பட்டவர்கள்:— துரைசாமி சுப்பிரமணியம், றெஜினா சுப்பிரமணியம்.

★ உதயதம்பி கேதீஸ்குமார் (காணாமற்போனவர்) புத்தூர் கிழக்கு, புத்தூர். அழைக்கப்பட்டவர்: உதயதம்பி ராஜேஸ்வரி.

★ பொன்னம்பலம் கண்ணதாசன் (காணாமற்போனவர்) தச்சன் தோப்பு, கைதடி. அழைக்கப்பட்டவர்:- சேகர்.

★ ஜெகநாதன்விஜயகுமார் (காணாமற்போனவர்) ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில். அழைக்கப்பட்டவர்:- தம்பு ஜெகநாதன் (கோண்டாவில்)

(ம-6)

## திருமணம் செய்ய இருந்த இளைஞர் உட்பட மூவர் படையினரால் கைது

### கல்வியங்காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

நாளை புதன்கிழமை பதிவுத் திருமணம் செய்யவிருந்த இளைஞர் ஒருவரும் அவரது சகோதரரும் உட்பட மூன்று இளைஞர்கள் கல்வியங்காடு பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கல்வியங்காடு பகுதியில் வசிக்கும் இவர்கள் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலாயுதம் சிவராசா (வயது 26) இவரே பதிவுத் திருமணம் செய்ய இருந்தவர் இவரது சகோதரன் வேலாயுதம் ஜெயராஜா (வயது 21) இவர்களது உறவினரான சின்னத்துரை சுபாகரன் (வயது 25) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த மூன்று இளைஞர்களும் 512 ஆவது பிரிகேட்டில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக படையினரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

கொக்குவில் பகுதியில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட விமலதாசன் பாஸ்கரன் (வயது 29) விஸ்வ வித்தியாலய வீதி, கொக்குவில்) என்ற இளைஞரும் 512 ஆவது பிரிகேட்டில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-5)

## மரண அறிவித்தல்

### லூக்காஸ் அந்தோனிப்பிள்ளை

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட லூக்காஸ் அந்தோனிப்பிள்ளை 17-03-2001 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வம், குணம், தவநாதன் (யேசுமாமா), இந்திரா (வவுனியா), மல்லிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற யோசேப், அன்னம்மா, காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20—03—2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கிறிஸ்து அரசர் ஆலயத் திருப்பலியுடன் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தவநாதன் (யேசுமாமா)
(மகன்).

பீச் றோட்,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(85627)

# பருத்தித்துறைச் செயலகம் முன்பாக ஆயிரக்கணக்கான மீனவர்கள் மறியல்!

## சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்கக் கோரி

**- வடமராட்சிச் செய்தியாளர் எஸ்.தில்லைநாதன் -**

வடமராட்சி,மார்ச்20

மீன்பிடிக்கும் நேரம் மற்றும் தூரத்தை அதிகரிக்குமாறும் கடலில சுதந்திரமாகத் தொழில் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் எனக் கோரியும் வடமராட்சி வடக்கு மீனவர்கள் நேற்று பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 9 மணி முதல் 11 மணி வரை இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கலந்து கொண்டனர்.

மும்மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பிரதேச செயலக வாசலில் திரண்ட மீனவர்கள் அங்கு சுமார் இரண்டு மணி நேரம் மறியலில் ஈடுபட்டனர்.

வடமராட்சி வடக்கிலுள்ள தொண்டமனாறு முதல் கற்கோவளம் வரையான கடற்கரைப் பகுதிகளில் வாழும மீனவர்களும், இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்கு கடல் பிரதேசத்தில் தொழில் புரியும் சேந்தாக்குளம், வலித்தூண்டல், மயிலிட்டி, பலாலி ஆகிய பகுதி மீனவர்களும் வடமராட்சி கிழக்குப் பகுதி கடற்றொழிலாளர்களும் இந்த மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மறியற் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரும் ரெலோ அமைப்பின் முக்கியஸ்தருமான எம்.கே.சிவாஜிலிங்கமும் மறியற் போராட்டத்தில் கலந்து கொண்டார்.

### தடுக்கப்பட்டனர்

பருத்தித்துறை பிரதேச செயலகம் நோக்கி தத்தமது கிராமங்களில் இருந்து கடற்றொழிலாளர்கள் ஊர்வலமாகப் புறப்பட்ட சமயம் சக்கோட்டை, மயிலியந்தனைப் பகுதிகளில் படையினர் அவர்களை தடுத்து நிறுத்தியதாகவும்-

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் கே.சூரியகுமாரன் ஆகியோர் படையினரிடம் தொடர்பு கொண்டதையடுத்து அவர்கள் தொடர்ந்து ஊர்வலம் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி வடக்கிலுள்ள கடற்கரையோரக் கிராமங்களில் இருந்து கடற்றொழிலாளர்கள் ஊர்வலமாக பருத்தித்துறை செயலகத்தை நேற்றுக் காலை 9 மணியளவில் வந்தடைந்தனர். அவர்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்ட சமயம் செயலகத்துக்குள் எவரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. செயலகப் பணிகளும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. முற்பகல் 10.30 மணியளவில் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி அங்கு வந்து சேர்ந்ததும் சமாசச் செயலாளரினால் மீன்பிடி அமைச்சர், வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜர்கள் அவரிடம் கையளிக்கப் பட்டன.

இதனை அடுத்து மறியற போராட்டத்தில் ஈடுபட்டோர் முற்பகல் 11 மணியளவில் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

பருத்தித்துறை சிவில் நிர்வாக இணைப்பாளருக்கும் மீனவ பிரதிநிதிகளால் மகஜர் கையளிக்கப் பட்டது.

இதேவேளை- வடமராட்சி கடற்றொழிலாளர்களின் இந்தப் போராட்டத்துக்கு விரைவில் நல்ல முடிவு கிடைக்காத பட்சத்தில் கடற்றொழிலாளர் சங்கசமாசங்கள் ஒன்றிணைந்து யாழ். மாவட்டம் முழுவதும் இந்தப் போராட்டத்தை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(ம-6-173)

## சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்கள்

வடமராட்சி,மார்ச்20

நேற்று இடம்பெற்ற மறியற் போராட்டத்தின் போது மீனவர்கள் தாங்கி இருந்த சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்கள் வருமாறு:-

- மீனவர்கள் சுதந்திரமாக தொழில செய்ய அனுமதி தா.
- பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் மீனவர்களுக்கு பதில் தா அரசே.
- யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே எமது பிரச்சினையை அரசுடன் பேசித்தீருங்கள்.
- மீனவர்களுக்கு உரிமை வழங்கும் வரை போராட்டம் தொடரும்.
- தென்பகுதிக்கு ஒரு நியாயம் வடபகுதிக்கு ஒரு நியாயமா?
- எங்கள் கடலில் சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதி.
- ஸ்ரீலங்கா அரசே மீனவக் குடும்பங்களை வாழ விடு.
- கடல் வலய தடைச்சட்டத்தை நீக்கு.
- மீன்பிடிக்கும் நேரம், தூரம் அதிகரிக்கப்பட வேண்டும்.
- மீனவர்களுக்கு மானியம் வழங்கு.
- கடல்வலயத் தடைச்சட்டத்தை நீக்கு.
- வலிகாமம் மக்கள் எவ்வளவு காலம் தான் இருப்பிடமின்றி ஓடித்திரிவது.
- மீன்பிடி உபகரணங்களை படையினர் தமது முகாமுக்குள் தடுத்து வைப்பதை நிறுத்த வேண்டும்.
- மீனவர்களை பட்டினிச்சாவுக்குத் தள்ளாதே.
- நிவாரணங்களைத் தந்து எம்மைச் சோம்பேறிகளாக்காதே. .

(ம-173)

## படிகளுக்கு முத்திரையிடும் பணி

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி தற்பொழுது பிரதேசசபை உப அலுவலகப் பணிமனைகளில் நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாவட்ட அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களத்தின் பரிசோதகரால் மேற்படி பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியின் போது பல தராசுப் படிகளில் குறைபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஒரு கிலோ கிராம் படியில் 130 கிறாம் அளவு குறைவாக இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது குறிப்படத்தக்கது. (ம-167)



மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் அண்மையில் இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தியது.

யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ச.குகதாஸன் நோயாளி ஒருவரை பரிசோதிப்பதைப் படத்தில் காணலாம். மூளாய் வைத்தியசாலைத் தலைவர் எம்.இரத்தினசிங்கம், மானிப்பாய் வட்ட அரிமாக் கழகத் தலைவர் லயன் ஏ.இருதயநாதன், சேவைத்திட்டப் பொறுப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

பிரபல கண்சிகிச்சை நிபுணர் ஆர்.பரராசசிங்கத்தின் மறைவின் பின்னர் இலவச சேவை இப்போது நடைபெறுகிறது. (ம)

## இலங்கை - பாகிஸ்தான் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

### இம்மாத இறுதியில் பேச்சுக்கள்

கொழும்பு,மார்ச்20

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையே விரைவில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்கென இலங்கையிலிருந்து விசேட தூதுக்குழு ஒன்று இம்மாத இறுதியில் பாகிஸ்தான் செல்ல உள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான சுதந்திரவர்த்தக உடன்படிக்கை அமுலுக்குவந்து ஒரு வருடமாகிவிட்டது. எனினும் அந்த உடன்படிக்கையினால் இலங்கைக்கு குறிப்பிடத்தக்க அளவிலான பயன்கள் எவையும் கிடைக்கவில்லை என்று வாணிப அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக சமநிலை பதின்மூன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையில் இந்தியாவுக்கு சார்பானதாகவே இருக்கின்றது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

இலங்கை இந்தியாவைப்போல் தேயிலை ஏற்றுமதி செய்யும் ஒரு நாடாக இருப்பதனால் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தேயிலை ஏற்றுமதி செய்வதில் சிக்கல்கள் தோன்றின. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இது இலங்கைக்கு பயன இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்தி உள்ளது.

ஆனால் பாகிஸ்தான் தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் உள்ளது. இது இலங்கைக்கு சாதகமானது என்றும் -

வருடத்துக்கு 2 கோடி கிலோ தேயிலையை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் - தெரிவிக்கப்படுகின்றது. (ம-180)

## நகை அடகு பிடிக்கும் திட்டத்தை அச்சுவேலிக் கிளையிலும் ஆரம்பிக்குக

### கிராம அபிவிருத்திக் குழு கோரிக்கை

அச்சுவேலி,மார்ச்20

அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையில் நகை அடகு பிடிக்கும் செயற்றிட்டத்தினை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று அச்சுவேலிக் கிராம அபிவிருத்திக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலியிலும் அதனோடு சேர்ந்த அயறகிராமங்களான ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, இடைக்காடு, அச்செழு போன்ற கிராமங்களிலும் விவசாயிகள் மற்றும் சிறு வியாபாரிகள் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் கூடிய வட்டி வீதத்தில் தனியாரிடம் கடன் பெறுகின்றனர். இதனால் பல்வேறு சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே பொதுமக்களின் வசதியைக் கருத்திற் கொண்டு அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையில் நகை அடகு பிடிக்கும் திட்டத்தினை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்- என்று அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கை அடங்கிய மகஜரின் பிரதிகள் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-11)

## மன்னித்து வாழப்பழகிக் கொள்வோம்!

### தவக்காலச் சிந்தனை

**21 ஆம் நாள்**

மனமாற்றத்தின் காலமாகிய தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தில் 'நான் உனக்கு இரக்கம் காட்டியது போல, நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா?' என்று தேவமைந்தன் கிறிஸ்து அறைகூவல் விடுகின்றார்.(மத் 18:33)

தன் தலைவனிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட பணியாளன் ஒருவன் இருந்தான். தலைவன் அவனுடைய கடனை அடைக்க ஆணையிட்ட பொழுது அவன் பொறுதி கேட்டமையால் தலைவன் அவன் கடனை மன்னித்துவிட்டான். ஆனால் அவனோ தன்னிடம் நூறுதெனாரியம் கடன்பட்ட உடன் பணியாளனை கடனைத் திருப்பித் தருமாறு கழுத்தை நெரித்து வற்புறுத்தினான்.

இதனை அவனுடைய உடன் பணியாளர்கள் தலைவனுக்கு அறிவிக்கவே அவன் பணியாளனை அழைத்து 'பொல்லாதவனே! நீ என்னை வேண்டிக்கொண்டதன் பேரில் உனக்கு கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தேன் நான்... நீயும் அது போல் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டுமல்லவா?' என்று சினந்து கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை வதைப்போரிடம் அவனைக் கையளித்தான்.

நாமும் பரலோக தந்தை எமது பெரிய பாவக் கறைகளை மன்னித்து எம்மை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் எமது அயலார் எமக்கு எதிராகச் செய்யும் குறை குற்றங்களைத் தானும் மன்னிக்க மனமில்லாது இருக்கின்றோம். இதையே ஆண்டவராகிய கிறிஸ்து 'உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர், சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்', என்று கூறி மன்னித்து வாழ எங்களை அழைத்து நிற்கின்றார்.

**- லூசியா சூசைப்பிள்ளை.**

## தெஹிவளை, கல்கிசைப் பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் 23 பேர் கைது

கல்கிசை, தெஹிவளை, பிலியந்தலைப் பகுதிகளில் தேடுதல் நடத்திய பொலீஸாரும், படையினரும் 23 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் சனிக்கிழமை அதிகாலை வரை நடத்திய தேடுதலிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தெஹிவளை, வைத்தியா வீதியில் கடந்த திங்கட்கிழமை தற்கொலை அங்கிகளுடன் நான்கு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதையடுத்து இந்தத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த புதன்கிழமை மாலை ஆமர் வீதிப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் 10 இளைஞர், யுவதிகளை கைது செய்துள்ளனர். அன்றையதினம் வீதிகளில் சோதனையில் ஈடுபட்ட படையினர் வீதியால் போய் வருவோரிடம் அடையாள அட்டை, பொலீஸ் பதிவு ஆகியவற்றையும் சோதித்தனர். (ம)

## வழக்குகள் மாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் இயங்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து வவுனியா மேல் நீதிமன்றில் இருந்த 10 யாழ்ப்பாண வழக்குகள் யாழ். மேல் நீதிமன்றிற்கு முதற்றடவையாக மாற்றப்பட்டுள்ளன.

மேற்படி 10 வழக்குகளுடனும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு யாழ். மேல் நீதிமன்றம் அறிவித்தல்களை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(ம-6)

## யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### தொழுவார்க்கு அச்சமில்லை

பல்லவி

சித்தம் மகிழ்ந்திட வைத்திடுமே வண்ணை
வைத்தீஸ்வரர் தலமே - என்றும்

அநுபல்லவி

எத்திக்கும் போற்றத் திகழும் தலமிதைப்
பக்தியுடன் தொழுவார்க்கு அச்சமில்லை
(சித்தம்)

சரணம்

தையல் நாயகியாம் அன்னையும் இணைந்து
துன்பம் நீக்கி இன்பம் தந்திடுவார்
வையத்திலே உயர் புஸ்ப கரணியாம்
தீர்த்தமும் கொண்டே திகழும் தலம்
(சித்தம்)

மீசாலையூர் ஏ.கே.ஏரம்பமூர்த்தி
*(இன்று இரண்டாம் திருவிழா)*

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி அழைப்பும்



தோற்றம்
09 - 10 - 1935

மறைவு
18 - 02 - 2001

## திருமதி பாலாம்பிகை இரத்தினசபாபதி

அறுபத்தாறு ஆண்டுகளாக எம்மை
அன்பாக வளர்த்து ஆளாக்கிய அம்மாவே!
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறிடுமோ உமது நினைவலைகள்.

அன்னாரின் நினைவாக இன்று (20-03-2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

*பிலாவடித் தெரு,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*

(85609)

**ஆர்.திருவருட்செல்வம்**
அம்புலன்ஸ் சாரதி
(மகன்)

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி கைது

மட்டக்களப்பு,மார்ச்20

மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரும் மனிதஉரிமைகள் சட்டத்தரணியுமான கனக.நமநாதன் கடந்த சனிக்கிழமை கொழும்பில் இருந்து வெள்ளை வானில் வந்த விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கென கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

தெஹிவளையில் வைத்து கடந்த திங்களன்று கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## இளைஞர் தாக்கப்பட்டு காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

தனிப்பட்ட பகைமை காரணமாக இருவரால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு அண்மையில் நேற்று முன்தினம் பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த நித்தியானந்த சர்மா பாரத் (வயது 20) என்பவரே காயமடைந்தவராவார். (ஐ-5)

## மருத்துவ பரிசோதனை முகாம்

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி பாபா சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் காட்டுப்புலம் அ.மி.த.க.பாடசாலை மாணவருக்கான மருத்துவ பரிசோதனை முகாம் நாளை புதன்கிழமை 9 மணிக்கு நடைபெறும்.

# 17ஆவது பிறந்தநாள் வாழ்த்து

20-03-2001



செல்வன்

## பரமானந்தம் சுபாகரன்

**வீ.பரமானந்தம்–ரேவதி தம்பதிகளின்**

செல்வப் புதல்வன் செல்வன் பரமானந்தம் சுபாகரன்

தனது 17 ஆவது பிறந்த நாளை தனது இல்லத்தில் இன்று (20-03-2001) செவ்வாய்க்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், தம்பிமார், தங்கைமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் மு.ஜெயநாதன் குடும்பம், அம்பன் G.S. குடும்பம், காந்தியக்கா குடும்பம், கல்வயல் தில்லைநடேசு, ஞானாம்பிகை குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:

அம்பன்,
குடத்தனை.

(85451)

**வீ.பரமானந்தம் – ரேவதி**
(அப்பா - அம்மா)

# யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்

# உயர்திரு.செ.தங்கராசா B.A. Dip. in.Ed. அவர்களின்

# சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழ் 20.03.2001

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1990ஆம் ஆண்டு இணைந்து கொண்ட திரு.செ.தங்கராசா ஆசிரியரை இக் கல்லூரியில் நான் பதவியேற்ற காலமாகிய 1996இல் இருந்து நன்கு அறிவேன்.

இக்கல்லூரியில் புவியியற் பாடத்தினைச் சிறப்புறக் கற்பித்து அப்பாடத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுக் கொண்டவர். இவரிடம் கல்விகற்ற மாணவர்கள் பலர் பட்டதாரிகளாகவும், இன்னும் பலர் பல்கலைக்கழகத்தில் பயின்று வருவதும், அவரது அயராத முயற்சி என்றே கூறவேண்டும்.

இத்தகைய பண்புகளைக் கொண்ட ஆசான் திரு.செ.தங்கராசா அவர்கள் 25 வருடம் ஆசிரியப் பணியாற்றி இன்று ஓய்வு பெறுகின்றார். இந்த நன்னாளிலே பெயருக்கேற்ற குணம் படைத்த இவரை சகல நலன்களும் பெற்று சிறந்த பயனுள்ள வாழ்வு வாழ, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிற்கிறேன்.

**பொ.கமலநாதன்,**
அதிபர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## சாதனை படைத்த ஆசான்

மிகுந்த இறைபக்தியும் ஆன்மீகத்துறையில் ஈடுபாடுமுள்ள திரு.செ.தங்கராசா ஆசிரியர் அவர்கள் தனது துறையில் சாதனை படைக்கும் ஆசானாக எமது கல்லூரியில் 1990இல் இணைந்த நாள் முதல் இற்றைவரை செயற்பட்டிருக்கின்றார்.

அவர் தனது துறையாகிய புவியியலில் தொடர்ச்சியாகப் பல சாதனைகளைப் படைப்பதற்கு அத்துறையில் அவருக்குரிய ஈடுபாடும் ஆற்றலும் மட்டும் காரணமல்ல. அவர் தன்னை ஒரு முழு நேர ஆசிரியராகக் கொண்டு, மாணவரின் ஈடேற்றமொன்றையே குறிக்கோளாகத் தன் மனதில் பதித்துச் செயற்பட்டமையும் ஒரு காரணமாகும்.

திரு.தங்கராசா அவர்கள் நல்லாசானுக்கான சகல பண்புகளையும் கொண்டிருந்தார். கடமையில் கண்ணாய், நல்லொழுக்கமுள்ளவராய், வீண் வார்த்தைப் பிரயோகம் செய்யாதவராய், தனது நடத்தையால் மாணவரைத் தன்பால் கவரக் கூடியவராய், மாணவர்களின் பெருமதிப்பினைப் பெற்றவராய், தன்துறையில் விற்பன்னராய் இருந்தார்.

அவர் ஓய்வு பெறுவது கல்லூரியின் புவியியற்றுறைக்கும் பெரும் இழப்பாகும். அவர் எதிர்காலத்திலும் தனது கல்வித் தொண்டினைத் தொடர்ந்தும் செய்வாரென எதிர்பார்க்கின்றோம்.

**அ.பஞ்சலிங்கம்**
முன்னாள் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.



உயர்திரு.
**செல்லப்பா தங்கராசா B.A., Dip.in. Ed.**

1. 1.03.1972 இலிருந்து யாழ்மாநகர சபையில் **Entertainment Tax Officer** ஆகவும்

ஆசிரியர் சேவையில்

2. 01.11.1976 இலிருந்து கமு/அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்திலும்
3. 25.02.1985 இலிருந்து யா/ஒஸ்மானியாக் கல்லூரியிலும்
4. 17.12.1990 இலிருந்து யா/கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் புவியியற்றுறை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

## புனிதப் பணி செய்த ஆசான்

அன்பான, அடக்கமான, ஆழமான ஆசான் தங்கராசாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

பிறக்கின்றோம், வாழ்கின்றோம், இறக்கின்றோம். இதுதான் வாழ்க்கையின் நியதி. ஆனால் நாம் சமுதாயத்திற்கு எம்மால் ஆன ஒரு சிறு பங்களிப்பை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் செய்தோமேயானால் எமது வாழ்க்கை முற்றுப் பெறுகின்றது. அங்கே சந்தோஷமும் இருக்கின்றது. ஒரு மனநிறைவு. இது தான் உண்மை, இது தான் நியதி. உண்மை, நீதி ஒரு போதும் அழியாதவை, அழிக்க முடியாதவை. இவரது கல்லூரிச் செயற்பாடுகள் யாவும் புனிதமானவை. பாடசாலைச் சமூகம் அவரை என்றென்றும் நினைவில் வைத்திருக்கும். தனது ஓய்வு நாளில் அவர் மேலும் பல சிறப்புக்களும் பெற்று நீடூழி காலம் வாழ பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் என்ற முறையில், எல்லாம் வல்ல ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

**சிவஞானம் ஸ்ரீகணேஷன்**
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## ஆசிரியர் கழகத்தின் வாழ்த்து

திரு.செல்லப்பா தங்கராசா அவர்கள் இருபத்தைந்து வருட கால கல்விச் சேவையைப் பூர்த்தி செய்து அரச சேவையில் இருந்து இன்றுடன் ஓய்வு பெறுகின்றார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக சிறந்த புவியியல் ஆசானாக, மாணவர்களின் விருப்பத்திற்குரிய ஆசிரியராக அளவிடற்கரிய சேவையாற்றி தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட பேராசான்.

அவரது இளைப்பாறல் எமது கல்லூரிக்கு பெரும் இழப்பாகும். யதார்த்தமாக சிந்தித்துச் செயற்படுகின்ற ஓர் ஆன்மீகவாதியாகத் திகழும் அவர் ஆன்மீகச் சிந்தனைகளினூடாக மனித மேம்பாட்டுக் கல்வியை மாணவர்களுக்கு ஊட்டுவதில் தன்னை அர்ப்பணித்துச் செயற்படுகின்ற ஒரு பண்பாளர்.

அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சியானதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமைந்து அவரும் அவரது குடும்பத்தினரும் பல சிறப்பும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை எமது கழகத்தின் சார்பாக இறைஞ்சுகின்றோம்.

**S.V.மகேந்திரன்**
தலைவர், ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## ஆசிரியர்களுக்கோர் முன்னோடி

கொக்குவில் இந்துக் கல்லூரியில் பதினொரு (11) ஆண்டுகள் ஆசிரியராகக் கடமை புரிந்த திரு.தங்கராசா அவர்கள் இன்றுடன் ஓய்வு பெறுகின்றார் என்ற செய்தியினை அறிந்தேன். அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டாவிட்டாலும் அவரைப் பற்றி நன்கு அறிந்தவர் நான். சிறந்த ஒழுக்க சீலரான இவர் ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டவர். புவியியல் கற்பித்தல் துறையில் தனக்கோர் இடத்தைப் பெற்றுக் கொண்ட இவர் ஓய்வு பெற்றாலும் அவரது சேவை நலிவுற்ற மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என வேண்டிக் கொண்டு அவரும், அவரது குடும்பமும் சகல செல்வங்களும் பெற்று சுகதேகியாக நீண்ட காலம் வாழ வேண்டும் என இறைவனை வேண்டி அவருக்கு எங்களது சங்கத்தின் சார்பில் பாராட்டையும், வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இ.நடராசா**
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# செம்மணிப் புதைகுழி வழக்கை மீண்டும் யாழ். நீதிமன்றுக்கு மாற்றக் கோரிக்கை

## காணாமற்போனோர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்ப்பாண நீதிமன்றில் இருந்து கொழும்புக்கு மாற்றப்பட்ட செம்மணிப் புதைகுழி வழக்கினை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு மாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கைதுசெய்யப்பட்டோர், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செம்மணிப் புதைகுழி வழக்கின் முக்கிய சாட்சிகள் அனைவரும் யாழ்ப்பாணத்திலேயே வாழ்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு வழக்குத் தவணைக்கும் கொழும்புக்குச் சென்று வர முடியாது.

யாழ்ப்பாணத்தில் தற்போது உயர் நீதிமன்றம் இயங்குவதால் இந்த வழக்கை யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் பிரதிகள் நீதி அமைச்சருக்கும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்ட 14 எலும்புக்கூடுகள் தொடர்பான மரபணுப் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையினால் இச் சம்பவத்தில் காணாமற்போனவர்களின் இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் இழப்பீடுகளை பெறமுடியாமல் இருக்கிறது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் காலதாமதம் காட்டும் அரசின் நடவடிக்கைக்கும் இக் கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

## மாதாந்தக் கொடுப்பனவு

உரும்பிராய்,மார்ச்20

தென்மராட்சிப் பகுதியிலிருந்தும், வலி.வடக்கு பகுதியிலிருந்தும் இடம்பெயர்ந்து உரும்பிராய் அஞ்சலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறப் பதிவு செய்தவர்களுக்கான இம் மாதக்கொடுப்பனவுகள் இப்போது வழங்கப்படுகின்றன என அஞ்சலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-154)



அம்பாள்துணை

### ஏழாலை மத்தி அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய புனருத்தாரண பஞ்சகுண்ட பக்ஷ

### மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**அம்பாள் அடியார்களே!**

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 9ம் நாள் (22.03.2001) வியாழக்கிழமை சித்தயோகமும் திரயோதசி திதியும் அவிட்ட நட்சத்திரமும் கூடிய காலை 6.17 மணிமுதல் 7.26 மணிவரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் கண்ணகை அம்பாளுக்கும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

❁ கிரியைகள் பங்குனி 5ஆம் நாள் (18.03.2001) ஞாயிறு இரவு 9.00 மணிமுதல் ஆரம்பமாகித் தொடர்ந்து பங்குனி 8ஆம் நாள் (21.03.2001) புதன்கிழமை காலை 6.30 மணிமுதல் தூபிஸ்தாபனம், கோவாசம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஸ்டபந்தனம் போன்ற கிரியைகள் இடம்பெறும்.

❁ புதன்கிழமை காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை எண்ணெய்க் காப்பு இடம்பெறும்.

❁ பங்குனி 9 ஆம் நாள் (22.03.2001) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணி தொடக்கம் விசேட தீபாராதனை அனந்தகோடி பிரதட்ஷண நமஸ்காரம், வேததோத்திர திருமுறை பாராயணம், சங்க மங்கள வாத்திய அஞ்சலி அந்தாபலி போன்ற கிரியைகள் இடம்பெற்று காலை 6.17 மணி தொடக்கம் 7.26 வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் மகாகும்பாபிஷேகம் இடம்பெறும்.

❁ **கும்பாபிஷேக கிரியைகளின் குருமார் விவரம்:**

*சர்வபோதகம :* **சிவஸ்ரீ அ. நடராசக்குருக்கள்** (கல்வியங்காடு)
**சிவஸ்ரீ சி. ஆறுமுகக்குருக்கள்** (கட்டுவன்)

*கும்பாபிஷேக பிரதமகுரு :*
**சிவஸ்ரீ சதா. மகேஸ்வரக்குருக்கள்** (நாயன்மார்கட்டு)

*சர்வசாதகம் :* **சிவஸ்ரீ ச.மகாலிங்கக்குருக்கள்** (நாயன்மார்கட்டு)
**சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக்குருக்கள்** (நாயன்மார்கட்டு)
**சிவஸ்ரீ சி.மகேந்திரநாதக்குருக்கள்** (மாயக்கை)
**மற்றும் பல உதவியாளர்களும்**

*அருள் ஆசியுரை :*
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
(நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)

*வாழ்த்துரைகள் :* **திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, தலைவர், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.)
❁ **திரு. வ.பேரின்பநாயகம்**
(தலைவர்,அகிலஇலங்கை திருமுறைமன்றம்)
❁ **சிவத்திரு. சிவ.சண்முகவடிவேல** (ஏழாலை)

மங்கள இசை : **T.M. வாசகர் குழுவினர்** (ஊரெழு)

தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று - (05.04.2001) வியாழக்கிழமை நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் திருவிழாவும் நடைபெறும்.

**அம்பாள் அடியார்கள் அனைவரும் மேற்படி கிரியா காலங்களில் கலந்து கொண்டு அம்பிகையின் திருவருளினைப் பெற்று உய்யும் வண்ணம் பணிவன்பாக வேண்டுகின்றோம்.**

**- ஆலய பரிபாலன சபையினர்.**

ஏழாலை. (85579)

## குண்டும் குழியுமாக காட்சிதரும் வீதி

உரும்பிராய்,மார்ச்20

உரும்பிராய் வடக்கிலுள்ள உரும்பிராய் இந்துக் கல்லூரி வீதி, பல ஆண்டுகளாக செப்பனிடப்படவில்லை. இதனால் இவ்வீதி குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. உரும்பிராய் இந்துக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் போன்றவற்றில் கல்வி பயிலும் மாணவர் உட்பட இந்த வீதியால் பயணம் செய்யும் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். (ம-154)

## நிதி ஒதுக்கப்பட்டும் வீதி திருத்தப்படவில்லை

தென்மராட்சி,மார்ச்20

பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள - வல்லிபுரக் கோயிலடியிலிருந்து அம்பன் வரையான - வீதியைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டும் வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு ஒப்பந்தகாரர் எவரும் முனவரவில்லை எனத் தெரியவருகிறது. (ம-117)

## இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்றிறன் பயிற்சி

வலி.தென்மேற்கு,மார்ச்20

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 14 நிலையங்கள் மூலம் இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்றிறன் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையினை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மட்டும் 11 நிலையங்களின ஊடாக இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு சுயதொழில் ஊக்குவிக்கப்படவுள்ளது.

மேற்படித் தொழிற்றிறன் பயிற்சித் திட்டத்துக்கு ஆள்சேர்ப்பு சனசமூக நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

தொழிற்றிறன் பயிற்சித் திட்டத்துக்கு 750 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-185)

## கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

அச்சுவேலி,மார்ச்20

வலி.கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தில் கணனிப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மாணவர்களுக்கு மிகக் குறைந்த சலுகைக் கட்டணத்துடன் நிறைவான பயிற்சி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் -

முதற்கட்டமாக நான்கு கணனிகளுடன் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு மாணவர் தொகைக்கு ஏற்ப கணனிகள் மற்றும் வசதிகள் மேலும் அதிகரிக்கப்பட இருப்பதாகவும் -

அச்சுவேலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.கந்தசாமி தெரிவித்தார்.

கணனிப் பயிற்சி பெற விரும்புவோர் அச்சுவேலி பொதுச்சந்தை மேல்மாடியில் உள்ள அலுவலகத்தில் உரிய விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-11)

## மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்.கன்னியர்மட மகா வித்தியாலய மாணவர்களுக்கான மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம-5)

### மீனவர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து

# இலங்கைத் தூதரகம் முன்பாக சென்னையில் இன்று ஆர்ப்பாட்டம்

சென்னை,மார்ச்20

இலங்கைக் கடற் படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்வதைக் கண்டித்து, இன்று செவ்வாய்க்கிழமை சென்னையிலுள்ள இலங்கைக்கான உதவித் தூதுவர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

தி.மு.கவின் இளைஞர் அணி இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது. தமிழ்நாடு கோடிக்கரைக்கு அப்பால் நடுக்கடலில் கடந்த சனிக்கிழமை மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நாகபட்டினத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் 3 மீனவர்கள் காயமடைந்தனர். கடந்த ஒரு வார காலத்தில் இடம்பெற்ற இரண்டாவது சூட்டுச் சம்பவம் இதுவாகும்.

மத்திய அரசாங்கமும் மாநில அரசுகளும் இந்திய மீனவர்கள் மீதான தாக்குதலை நிறுத்தும்படி பலமுறை இலங்கை அரசிடம் வலியுறுத்தியும் தாக்குதல்கள் தொடர்கின்றன. இது குறித்து பலமுறை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. எனினும் தாக்குதல்கள் நிறுத்தப்படவில்லை என்று தி.மு.கவின் இளைஞர் அணிச் செயலாளரும் சென்னை மேயருமான மு.க.ஸ்டாலின் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7-3-9)


## நிக்சன் அதிர்ஷ்ட முதலீட்டுத் திட்டம்

நண்பர்களுக்கு மட்டும்

மாதாந்தக் கட்டுப் பணம் ரூபா 500/=. மாதம் மாதம் 15 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 25000/= உடன் வழங்கப்படும்.

அதிர்ஷ்டத்தின் பின்னர் பணம் கட்டத் தேவையில்லை.

மேலும் (இலவசமாக) 25 பேருக்கு சிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

எதிர்வரும் 25.03.2001ஆம் திகதிக்கு முன்பு பணத்தைக் கட்டிப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**நிக்சன் பல்பொருள் வாணிபம்**

(பஸ்நிலையம் முன்பாக)
அச்சுவேலி. (C/15772)



## IT NET COMMUNICATION & NETCAFE

வெளிநாட்டு இணைப்புத் தொலைபேசி அழைப்புக்கள் குறைந்த விலையில்!

- ஒரு வருட அனுபவ சேவை
- ISDN 128 Kb, Speed Line சேவை
- 10 செக்கன்களில் தொடர்பு இணைக்கப்படும்.

மிகவும் துல்லியமான அழைப்புக்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும்.

T.P. 466752, 466952, 466718, 466918, 384586

**183, Sea Street, Colombo - 11** (85596)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1952 - 12 - 18



இறைவன் அடியில் 1998 - 03 - 23

அமரர்

**கனகரட்ணம் பாலசுந்தரராசா (பி.எஸ்சி.)**

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட எழுதுவினைஞர், கிளிநொச்சி செயகம்)

*திதி: ஏகாதசி* (20 - 03 - 2001)

அன்பின் பாலா இப்பூமியில் வந்துதித்து
பாசம்தனை அள்ளிச்சொரிந்து நெஞ்சுருகவிட்டு
திடீர் மாரடைப்பினால் எமைவிட்டுச் சென்றாயே....
ஆண்டு மூன்று சென்றாலும் உம்திருமுகம்
எம் மனதை விட்டு என்றும் நீங்காதையா!

*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.* (C/15749)

உங்கள் பிரிவால் துயருறும்;
**பா.பாஞ்சாலி** (மனைவி)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பலகைகள் அரிந்தெடுக்கக் கூடிய நல்ல நிலையில் உள்ள பெரிய மா மரங்கள், வேப்பமரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 15/15, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி. (85626)

ELF 250 எல்வ் வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திரு. பொ.உதயன்(உதயகுமார்), பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. (85630)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

கோயிலாக்கண்டி மேற்கு, தச்சன தோப்பு, கைதடி என்ற முகவரியைச் சேர்ந்த துரைராசா மங்கையர்க்கரசி என்பவருடைய அடையாள அட்டைகள் இரண்டும், பேர்ஸும் ஆஸ்பத்திரி வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் இவ்விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சி.வடிவேற கரசு, 241/6, றெயில் றோட், கந்தர்மடம். (85605)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உத்தரட்டாதி முதலாம் பாதம் 26.06.1970இல் பிறந்த லக்கினத்தில் செவ்வாய் உள்ள கொம்பியூட்டா நிறுவனம் சொந்தமாக நடத்தும் மணமகனுக்குப் பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். UNITED திருமண சேவை, C/o ஜெயராணி, நவாலி வடக்கு, சனசமூக நிலையத்துக்கு அருகில். (C/15793)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உத்தராடம், 13.02.1972 (மாலை 1.55)இல் பிறந்த, பொறியியலாளர் மணமகனுக்குப் பொருத்தமான மணமகளைப் பெறறோர் எதிர்பார்க்கின்றார்கள். தகுந்த சீதனம் எதிர்பார்க்கப்படும். UNITED திருமண சேவை, C/o ஜெயராணி, நவாலி வடக்கு, சனசமூக நிலையத்துக்கு அருகில். (C/15792)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 3081. *(C/15377)*

### ENGLISH CLASSES

O/L, A/L, G.A.Q., B.A., பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான ஆங்கிலம் இலகு முறையில் கற்பிக்கப்படும். ஆசிரியர்: K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (85189)

### துர்க்கா திருமண சேவை

எங்களிடம் வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், ஆசிரியர் முதலிய மணமக்கள் உண்டு. புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, பிறவுண் றோட் சந்தி, யாழ்ப்பாணம். (85628)

### தவறிவிட்டது


நெடுங்குளம் வீதி, அரியாலை என்ற முகவரியைச் சேர்ந்த மகேந்திரன் பகீரதன் என்பவருடைய தேசிய அ.அ.(இல.840861015V) 13.03.2001 அன்று நல்லூருக்கும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 232, கண்டி வீதி, அரியாலை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (85624)

### தொண்டமானாறு பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்புகளுக்கான முதலாம் தவணைப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆண்டு 12 வகுப்புகளுக்கு ஏப்ரல் 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரையும், ஆண்டு 13 வகுப்புகளுக்கு மார்ச் 28ஆம் திகதி முதல் ஏப்ரல் 10ஆம் திகதி வரையும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

(ம-9-ரி)



## நீ நினைத்தால் எல்லாம் நடக்குமம்மா!

ஊர் பிரிந்து ஓடி அநுபவிக்க வைத்தவளும் நீ
உண்மைத் தரிசனத்தை உணர்த்தி வைத்தவளும் நீ
பேர் சொல்லி வாழ்பவரை அரவணைத்துக் காப்பவளும் நீ
பேதமையை மக்களிடம் விரட்டி வைப்பவளும் நீ
போர் ஒழிந்து சமாதானம் மலர வைப்பவளும் நீ
புதுயுகத்தைத் தமிழருக்கு விரைவில் தருபவளும் நீ
பார்முழுதும் உனையறிந்து வாழ வைப்பவளும் நீ
பக்தராய் உனைச்சரண்புகுந்தால் எல்லாம் தருபவளும் நீ

**மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்**

காரைநகர் திருமணற்காடு அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்து மாரியன்னையின் இன்றைய 11 ஆம் திருவிழாவில் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ பிரார்த்திப்பவர்கள்

அன்னையின் அன்பன்

**திரு. கந்தையா சிவகுமார்**

மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் — **தேசிய சேமிப்பு வங்கி**

(85622)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 05 - 02 - 1927 | உதிர்வு 17 - 02 - 2001

திருமதி

**ஜோண் திரேசம்மா** (மரியமலர்),

எமது வாழ்வகத்தின் திரு விளக்கே!
வன்னி மண்ணாம் வவுனியாவில் அணைந்த-
சுடர்விளக்கே!
உன்னில் உருவாகிய சொந்தங்கள் திக்கொன்று
திசை ஒன்றாய்
உருகியே அழைக்கின்றோம்: எழுந்து நீ வந்திடம்மா!
வரமாட்டாய் நீ! ஏனெனில் உன் ஜீவன் தேவனுடன்!!

பிரிவால் துயரும்:

**பிள்ளைகள், மருமக்கள், சகோதரிகள், மச்சாள்மார், பேர, பூட்டப்பிள்ளைகள்.**

*30, புதிய வீடமைப்புத்திட்டம், குருநகர், யாழ்ப்பாணம்.* (85625)

*தகவல்*

**ஜோண் ஜெயக்குமார்**(மகன்)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் நிரந்தரப் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 2001.04.12 ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. பதவி : புத்தகம் கட்டுநர், தரம் 11**

**தகைமைகள் :** 8ஆம் வகுப்பு சித்தியடைந்தவராகவும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் புத்தகம் கட்டுநராக 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம :** ரூபா 5450 – 11 X 110 – 6660/- (மாதமொன்றுக்கு)

**வயது :** விண்ணப்ப முடிவு திகதியில் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு :** தொழில்சார் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

**2. பதவி : விளையாட்டு மைதான பராமரிப்பாளர், தரம் 11**

**தகைமைகள் :**

அ) வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

ஆ) துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், றக்பி (rugby), ஹொக்கி (hockey), பூப்பந்தாட்டம் (badminton), ரெனிஸ் (tennis) போன்ற வெவ்வேறு வகையான விளையாட்டுகளுக்கான விளையாட்டு மைதானங்களைத் தயார் செய்வதில் அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ) எல்லா வகையான விளையாட்டு - உபகரணங்களையும் பராமரிப்பதில் அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.

ஈ) விளையாட்டு மைதானங்களைப் பராமரிப்பதில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :** ரூபா 5450 – 11 X 110 – 6660/- (மாதமொன்றுக்கு)

**வயது :** விண்ணப்ப முடிவுதிகதியில் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு :** பொது உளச்சார்பு பரீட்சைமூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும்.

**3. பதவி : வர்ணம் தீட்டுநர், தரம் 11**

**தகமைகள் :**

1. வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

11. அ. கட்டட நிர்மாணத்திலும் பராமரிப்பிலும் செய்யப்படும் வர்ணம் தீட்டும் வேலை.

ஆ. எல்லாப் பிரபல்யமானதும் மற்றும் சந்தையிலுள்ள உற்பத்தி ஆக்கவுரிமை பெற்ற சாதாரண வர்ணங்கள், எல்லா வகையான பொருள்கள், பல்வேறு வகையான மேற்பரப்புக்களைத் தகுந்த முறையில் வர்ணம் தீட்டி செம்மையாக நிறைவு செய்யும் வரை பல்வேறு நிலைகளில் தெரிவு செய்யப்பட்ட பொருள்களைச் சரியானவகையில் பயன்படுத்தல்.

இ. பல்வேறு விதமான கலவைகளைத் தயாரிப்பதும் வர்ணம் தீட்டும் பொருள்களைத் தகுந்த முறையில் களஞ்சியப்படுத்துதலும்.

ஈ. உபகரணங்களின் பயன்பாடும் அவற்றைச் சிக்கனமாகப் பேணுதலும் ஆகியவற்றில் நல்ல பரிச்சயம் உடையவராக இருத்தல் வேண்டும்.

111. அரசாங்கத் திணைக்களம்/கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் வர்ணம் தீட்டும் வேலையில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :** ரூபா 5450 – 11 X 110–6660/- (மாதமொன்றுக்கு)

**வயது :** விண்ணப்ப முடிவுதிகதியில் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு :** தொழில்சார் பரீட்சைமூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் நியதிச்சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுபவர். பின்வரும் நன்மைகளுக்கும் உரித்துடையவராவார்.

1. பல்கலைக்கழக சேமலாபநிதி மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம்.
2. ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவு.
3. ஊழியர் நம்பிக்கை நிதியநலன்.
4. இலவச மருத்துவ வசதிகள்.
5. அக்ரஹார காப்புறுதித்திட்டம்.

விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழகக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தாபனக்கிளையின் உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

தபால்மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23X10 ச.மீ அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்ப வேண்டும்.

அரச திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் நியமன அதிகாரியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். சேவையில் இருப்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பதவிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லை பொருந்தாது.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பமுடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**
**2001-03-12**

(C/15794)

### செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் செல்ல வசதியாக

# அச்சுவேலி- தொண்டமனாறு பாதையைத் திறக்கக் கோரிக்கை

அச்சுவேலி, மார்ச் 20

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்குப் பொதுமக்கள் இலகுவாகச் செல்வதற்கு வசதியாக அச்சுவேலி — தொண்டமானாறு வீதியைப் பாவனைக்குத் திறக்க வேண்டும் என்று அச்சுவேலிப் பிரதேச சனசமூக நிலையங்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலியில் இருந்து தொண்டமானாறு நோக்கிச் செல்லும் வீதி தற்பொழுது தம்பாலைச் சந்தி வரை பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது எனினும் தம்பாலைச் சந்திக்கு அப்பால் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனால் வலிகாமம் பகுதியில் இருந்து செல்லும் பொது மக்கள் நீண்டதூரம் பிரயாணம் செய்து நெல்லியடி தொண்டமானாறு வீதி வழியாகவே ஆலயத்திற்குச் சென்று வருகின்றனர்

ஆலய உற்சவ காலங்களில் குடாநாட்டு மக்கள் எல்லோரும் ஒரே வீதியால் மட்டும் ஆலயத்திற்குச்செல்லவேண்டி இருப்பதால் பெரும் நெருக்கடி ஏற்படுவதோடு விபத்துக்கள் நடைபெறுவதாகவும் —

அச்சுவேலி தொண்டமானாறு வீதியை காற்றாட்டி வரையும் போக்குவரத்துக்கு அனுமதிப்பதன் மூலமும் —

குடாக்கடல் நீரேரித்தடை அரண் அருகாக தற்காலிக வீதி அமைப்பு மூலமும்—

செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய முடியும் என்றும் —

மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கும், அரசியல் பிரமுகர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-11)

# பிரிட்டிஷ் தடை பேச்சைப் பாதிக்காது என்கின்றார் அந்த நாட்டின் எம்.பி

கொழும்பு, மார்ச் 20

விடுதலைப்புலிகள் அமைப்பு மீது பிரிட்டன் விதித்திருக்கும் தடை இலங்கையின் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது என்று பரிஹார்டினர் என்னும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பிரித்தானிய தேர்தலில்பிரித்தானியாவாழ் தமிழர்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்பது குறித்து ஆராயுமுகமாக இங்குள்ள தமிழர் சம்மேளனம் என்னும் அமைப்பு லண்டன் கிங்ஸ்லி பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தியது.

அந்த அமைப்பின் இணைப்பாளர் ஜெயதேவன் என்பவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் விவகாரங்களில் அக்கறை கொண்டவர்களும், பிரித்தானியாவின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்தவர்களுமான, பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களான பரிஹாக்டினர், கரட் தோமஸ், அன்ருகிமோர் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபர்ட் ஈவன் ஆகியோரும் கலந்து கொண்டதாக பி.பி.ஸி. செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் உட்பட 21 அமைப்புகள் மீது பிரித்தானிய அரசாங்கம் தடை கொண்டு வந்தது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பல இலங்கைத் தமிழர்கள் மிகுந்த விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆனால் கன்சர் வேட்டிவ் கட்சியுடன் ஒப்பிடுகையில் தொழிற்கட்சியின் நடவடிக்கைகள் இலங்கைத் தமிழர்களுக்குச் சாதகமானவை என்ற எதிர்பார்ப்பில் அந்தக் கட்சிக்கே எதிர்வரும் தேர்தலில் தமிழர்கள் ஆதரவு வழங்குவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது

இதேவேளை —

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பலதரப்பட்ட கேள்விகளையும் தொடுத்தனர். (ஐ)

### கவனிப்பாரின்றிக் கிடக்கும்

# அச்சுவேலி தொழிற்பேட்டை; கல்லும் மண்ணும் அபகரிப்பு

அச்சுவேலி, மார்ச் 20

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை அமைந்திருந்த காணிகளில் இருந்து பெருமளவில் மண், கல் என்பன அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.

அச்சுவேலி அரசினர் கைத்தொழிற்பேட்டை 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெரியளவில் செயற்பட்டது. 20 க்கு மேற்பட்டதொழிற்சாலைகள் அங்கு இயங்கிக்கொண்டிருந்தன. யுத்த சூழ்நிலைகள் காரணமாகப் பின்னர் அவை செயலிழந்தன.

தொழிற்சாலைக் கட்டடங்கள் இடித்தழிக்கப்பட்டன. தற்பொழுது தொழிற்சாலைகள் அமைந்திருந்த பிரதேசம் பற்றைக்காடுகள் மண்டிக் காணப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் இருந்து பெருமளவில் மண், கல் என்பன அகழ்ந்து எடுக்கப்படுகின்றன ஐந்து முதல் ஆறு அடி ஆழத்திற்கு பெரியளவில் மண் அகழ்ந்தெடுத்த குழிகள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. (ம-11)

# பௌத்த சிலைகள் அழிக்கப்படுவது இந்துக்களுக்கு வேதனை தருகிறது

## யாழ். இந்து சமயப் பேரவை தலிபானுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

பௌத்த மதம் இந்து மதங்களில் இருந்து பிரிந்த ஒன்று. அதனால் பௌத்த மதத்தை இந்துக்கள் தாய்மை உணர்வோடு புரிந்து கொண்டுள்ளனர். இதனால் தங்கள் நாட்டில் பௌத்த மதச்சிலைகள் அழிக்கப்படுவது அறிந்து மனவேதனையடைகிறோம்.

யாழ். இந்து சமயப் பேரவை ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இக்கட்டான சூழ்நிலையிலும் இந்து மதத்தின் பெருமைகளை நன்கு புரிந்து கொண்ட தாங்கள் தங்கள் நாட்டில் வாழும் மக்களின் இந்து மத சுதந்திரத்தை உறுதி செய்து இந்துமதச் சிலைகளைத் தகர்ப்பதில்லை என்ற தங்கள் அரசின் முடிவை பெருமனத்துடன் வரவேற்கின்றோம்.

இந்த நேரத்தில் இந்து மதத்தை அனுட்டிக்கும் இந்துக்களுக்குத் தலிபான் நாட்டில் வழங்கப்பட்டுள்ள மத சுதந்திரத்தை மிகவும் பெரிதாகவே மதிக்கின்றோம்.

எனினும் பௌத்த மதம் இந்து மதத்திலிருந்து பிரிந்த மதங்களிலொன்று என்பதையும் அதனால் பௌத்த மதத்தை இந்துக்கள் தாய்மையுணர்வோடு புரிந்து கொண்டு வருகின்றனர். இதன் காரணமாகத் தங்கள் நாட்டில் பௌத்தமதச் சிலைகள் அழிக்கப்படுவதை அறிந்து மனவேதனை அடைகின்றோம்

எல்லா உயிர்களும் இறைவனது குழந்தைகள். அவர்கள் தத்தமது அனுபவ நிலைக்கு ஏற்ப வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுகின்றனர். வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் ஒரு பரம்பொருளை நோக்கியே பிரார்த்திக்கின்றனர்.

இதனை நன்குணர்ந்தே எமது பேரவை தங்களுக்கு இந்த மேலான ஆலோசனையை இறைவனின் திருவருளோடு கூட்டி வழங்குகிறது.

உலகம் முழுவதிலும் இப்போது பல்வேறு மதப் பிரச்சினைகள் இன்று வளர்கின்றன. இதனை இத்தகைய மேலான சிந்தனை மூலமே தீர்த்துவைக்க முடியும் என்றும் நல்ல இலட்சியங்களை முன்னெடுக்க ஏதுவாக இருக்கும் என்றும் கருதி இதனைத் தங்களுக்கு அறியத்தருகின்றோம். — என்று உள்ளது.

# சைவத்தின் மேன்மையை உலகறியச் செய்தவர் கைலாசநாதக் குருக்கள்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 20

சைவ சமயத்தின் மேன்மையை உலகறியச் செய்தவர்களில் கைலாசநாதக்குருக்கள் முக்கியமானவர் தனது கலாநிதிப்பட்டத்துக்காக அவர் இதிகாசங்கள், புராணங்களில் சைவ சமய நெறியின் மேன்மை குறித்து ஆய்வு செய்தார். அதன் மூலம் இந்த உலகுக்கு சைவ சமயத்தின் சிறப்பையும் மேன்மையையும் நன்குணர்த்தினார்.

— இவ்வாறு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தெரிவித்தார்.

'கைலாச நாதம்' நூல் வெளியீட்டு விழாவில் தொடக்கவுரை நிகழ்த்தும் போது அவர் இதனைக் கூறினார்.

வாழ்நாள் பேராசிரியர் அமரர் கா. கைலாசநாதக் குருக்களின் நினைவு மலராகிய, இந்த நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் நல்லூர் சிவன் கோயிலில் நடைபெற்றது.

பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வாழ் நாள்பேராசிரியரான எங்கள் ஆசான் வாழ்நாள் முழுவதும்புலமைத்துவம்மிக்க கல்வியாளனாகவும், பண்பாட்டுச் சிந்தனையாளனாகவும்பண்பாட்டுமரபை பேணிப் பாதுகாத்தவராகவும் திகழ்ந்தார். இவர் தமதுமரபுமாறாது 79 ஆண்டுகள்வாழ்ந்தவர். சேர் பொன் ராமநாதனின் குடும்பத்தாருடன் குருக்களின் குடும்பம் மிகவும் ஈடுபாடு கொண்டு இருந்தது பரமேஸ்வராக் கல்லூரியில் கல்விகற்ற குருக்கள் அக்கல்லூரியே பின்னர் யாழ் பல்கலைக்கழகமாக உருவாகிய போது இந்துநாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும். துறைத்தலைவராகவும் திகழ்ந்தவர்.

யாழ். பல்கலைக்கழகம் 1993 ஆம் ஆண்டு பேராசிரியருக்கு 'வாழ் நாட்பேராசிரியர்' என்னும் அந்தஸ்தையும் 1998 ஆம் ஆண்டு 'கௌரவ இலக்கிய கலாநிதி'' பட்டத்தையும் வழங்கி கௌரவித்தது.

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் ஞாபகார்த்த சபை ஊடாக வருடந்தோறும் அவரின் பெயரால்நினைவுச் சொற்பொழிவுகளை நடத்தவும், இந்து நாகரிகம், சமஸ்கிருதம், இந்துமெய்யியல் ஆகிய துறைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கவும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். அத்தோடு பேராசிரியரின் ''கலாநிதி'' ஆய்வுக் கட்டுரையை பதிப்பிக்கவும் திட்டமிட்டுள்ளோம்— என்று கூறினார்.

பேராசிரியர் இ. குமாரவடிவேல் தனது உரையில் கூறியதாவது!-

எமது நாட்டில் அரசியல் பிரச்சினைகளில் ஏனைய மதங்களைச் சேர்ந்த குருமார் அக்கறை செலுத்துவது போன்று இந்துக்குருமார் அக்கறை செலுத்துவதில்லை.

தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் இந்து மதகுருமார் தலையிடாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

தமிழ் மக்களுக்குப் பொதுவாகவும் அந்தணப் பெருமக்களுக்குச் சிறப்பாகவும் வாழ்ந்து காட்டி அமரராகி விட்ட வணக்கத்திற்கும் மதிப்புக்கும் உரிய பேராசிரியர் கைலாசநாதக்குருக்களின் வழியில் அந்தணப் பெருமக்கள் யாவரும் சமயப்பணி, சமயப் போதனை ஆகியவற்றோடு சமூகப் பணியையும் செய்வதற்கு முன்வர வேண்டும்.

இன்று பல்கலைக்கழக மாணவர்களில் இந்து நாகரிகத்தை சிறப்பாகத் தெரிந்து படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களைத் தவிர ஏனையோர் இந்துசமய நடவடிக்கைகளிலும் இந்து மன்றங்களிலும் இணைவது குறைவாகவே உள்ளது. இந்து நாகரிகத் துறையில் கற்கும் மாணவர்களிலும் ஏறத்தாழ 90 சதவீதமான மாணவர்கள் பட்டங்களுக்காகவும் வேலை வாய்ப்புக்காகவுமே படிக்கின்றனர்.

அவற்றுக்கும் மேலாக இவர்கள் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் வாழ்ந்து காட்டிய வழியில் சமயநடைமுறைகளை வாழ்வில் கடைப்பிடித்து சமுதாயப் பணிகளை ஆற்ற முன்வர வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். (ம-5-ரி)

# அச்சுவேலி கோழிப்பண்ணை கையளிப்பு

அச்சுவேலி, மார்ச் 20

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் உள்ள கோழிப்பண்ணையை யாழ்.மாவட்ட கூட்டுறவு வங்கிகளின் சமாஜம் பொறுப்பேற்றுக் கொண்டது.

அச்சுவேலி அரசினர் கைத்தொழிற் பேட்டையில் செயற்பட்டு வரும் கோழிப்பண்ணையையும் குஞ்சுபொரிக்கும் நிலையத்தையும் இதுவரை காலமும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமே நிர்வகித்து வந்தது. தற்பொழுது இதனை யாழ். மாவட்ட கூட்டுறவு வங்கிகளின் சமாஜம் பொறுப்பேற்றுள்ளது

பண்ணையைப் பொறுப்பேற்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள யாழ் மாவட்ட பணிப்பாளர் பொன். இராமநாதன் பண்ணையின் பொறுப்புக்களைக் கையளித்தார். (ம-11)

# அதிகாரி காங்கேசன் விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன் கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (ம-10)

# திருட்டு முயற்சி முறியடிப்பு

வடமராட்சி, மார்ச் 19

நள்ளிரவு வேளையில் வீடொன்றில் திருடச் சென்ற காற்சட்டை அணிந்த இனந்தெரியாத இரு இளைஞர்கள் வீட்டின் கதவைத்தட்டிய போது வீட்டில் உள்ளோர் லைற்றைப் போட்டு கூக்குரலிடவே திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கரவெட்டி மத்தியிலுள்ள பெரிய தோட்டம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

திருடவந்தோர் வீட்டின் இருபக்கங்களில் உள்ளபடலைகளைப்பிடுங்கிக் கொண்டு உள்ளே வந்து வெளியே படுத்திருந்தவரை சத்தம் போட வேண்டாம் என அச்சுறுத்தி விட்டு வீட்டின் கதவைத்தட்டியதாகக் கூறப்பட்டது. (ஐ-137)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. இரகுநாதன் சிவபாதசேகரம்
(B. A., DIP. in Ed., Sp Trd., S L. P. S.)

யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண
வித்தியாசாலை அதிபர்

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2-1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டுவதோடு அவரது கல்விப்பணி மேலும் சிறக்க நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

பிரதி அதிபர்,
ஆசிரியர்கள்.

யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ணவித்தியாசாலை,
கொக்குவில்.

[85638]



உ
சிவமயம்

### வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில், கோப்பாய் மகாசபை அங்கத்துவம் புதுப்பித்தல் குறித்த

## அறிவித்தல்

மேற்படி ஆலய தரும பரிபாலன சபையின் 14-3-2001 ஆம் திகதிய கூட்டத் தீர்மானத்துக்கு அமைய மகாசபை அங்கத்துவம் புதுப்பிக்கப்படவுள்ளது. அண்மையில் மகாசபையின் வருடாந்தப்பொதுக் கூட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது ஆகவே அங்கத்துவ சந்தா செலுத்திய உறுப்பினர்கள் யாப்பு விதிக்கமைய தங்கள் அங்கத்துவத்தை 18-4-2001ஆம் திகதிக்கு முன்னர் புதுப்பித்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

1. ஆண்டுகள் 2000, 2001க்கு இருவருட அங்கத்தவர் சந்தாப்பணம் ரூபா 120ஐச் செலுத்திப்பற்றுச் சிட்டுப் பெற்றுக்கொள்ளவும்.
2. ஆயுள்கால அங்கத்துவம் பெறுபவர்கள் ரூபா 1000/- செலுத்தியும் புதிதாக அங்கத்துவம் பெறுபவர்கள் ரூபா 120/- செலுத்தியும் பற்றுச்சிட்டுப்பெற்று அங்கத்தவர் விண்ணப்பப்படிவம் மூலம் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

மேற்படி கடமைகளை சபையின் செயலாளர் பொருளாளர்களுடன் தொர்புகொண்டு மேற்கொள்ளவும்.

த. தர்மராசா — தலைவர்
ச. குணசிங்கம் — பொருளாளர்
ஐ. சிவலோகநாதன் — செயலாளர்

ஆலய தர்ம பரிபாலன சபையினர்

(85636)



### யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
உயர்தர மாணவர் மன்ற

## ஒன்று கூடல்

காலம்: இன்று (20-03-2001) செவ்வாய்க்கிழமை
நேரம்: காலை 9.30 மணி (புதிய நேரம்)

பிரதம விருந்தினர்:
Dr. M. மகேசன் அவர்கள்

ஆசியுரை: திரு. க. சிவாஜி (அதிபர்)
சிறப்பு விருந்தினர்: திரு. R. குமரன் (B.Sc.) (ஆசிரியர்)

உயர்தர மாணவர் மன்றம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(85641)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஆ. ஞானகௌரி அவர்களின்
அன்புத் துணைவனார்

### நடராஜா ஆனந்தகுமார்

அவர்கள் லண்டனில் அகாலமரணமடைந்த செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்

யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்,
புத்தூர்.

(85637)


### அரசைப் பதவி விலகக்கோரிவரும்
## எதிர்க்கட்சிகளின் அமளிகளால்
# இந்திய நாடாளுமன்றம் ஸ்தம்பிதம்

புதுடில்லி, மார்ச் 20

இந்தியாவில் 'தெகல்கார் டொட்கொம்' இணையதளச் செய்தி நிறுவனம் அம்பலப்படுத்திய பாதுகாப்புத்துறை ஊழல் தொடர்பாக, வாஜ்பாய் அரசு பதவி விலக வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் நேற்று நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்டனர். அதனால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

நேற்றுக் காலை மக்களவை கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசு தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்று கூச்சலிட்டுக்கொண்டு அவையின் நடுவில் திரண்டனர்.

அவையின் கண்ணியத்தைக் காக்கும்படி சபாநாயகர் பாலயோகி பலமுறை வேண்டுகோள் விடுத்த போதும், பலனில்லாததால், அவையை ஒத்திப்போட்டார். மாநிலங்கள் அவையிலும் இதே போன்றே நடந்தது.

மக்களவையின் நேற்றைய பணிப்பட்டியலில், செலவினங்களுக்கான ஒதுக்கீடு விவசாயிகளின் பிரச்சினை, ரயில்வே வரவுசெலவுத் திட்டம், பங்குச் சந்தை போன்ற முக்கிய விடயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருந்தன.

பாதுகாப்புத்துறை ஊழல் விவகாரம் வெளிவந்தபின்னர் கடந்த 4 நாள்களாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டு வருவதால். நாடாளுமன்றத்தின் அன்றாடப் பணிகள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### பதவியேற்ற பின்னர் முதன் முறையாக
# இஸ்ரேலியப் பிரதமர் அமெரிக்கா விஜயம்

டெல்அவிவ், மார்ச் 20

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் அமெரிக்கா சென்றடைந்தார்.

மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும் தனது முயற்சிகளுக்கு அமெரிக்காவின் ஆதரவைத் திரட்டவே ஷெரோன் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சமாதான முயற்சிகளின் பழைய அணுகு முறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும் — இஸ்ரேலியருக்கும் பலஸ்தீனருக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட முன்னர் மேற்குக் கரைப் பிரதேசங்களில் இரு தரப்புக்கும் இடையே நிகழ்ந்து வரும் மோதல் வன்முறைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய அடிப்படையில் சமாதானத்தை ஏற்படுத்தும் தனது திட்டத்துக்கு அமெரிக்க அரசின் ஆதரவைப் பெறவே ஷெரோன் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவிலும், இஸ்ரேலிலும் புதிய அரசுகள் பதவியேற்றுள்ள நிலையில் ஷெரோன் அமெரிக்க அதிபர் புஷ்ஷை சந்திப்பது இரு நாட்டு உறவின் எதிர்கால நிலைப்பாட்டைத் தீர்மானிக்கும் என்று கூறப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் இஸ்ரேலுக்கு 3 பில்லியன் டொலர்களை அமெரிக்கா உதவியாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

## பீஹாரில் விவசாயிகள் மோதல்

பாட்னா, மார்ச் 20

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் வைகத்பூர் பகுதி விவசாயிகளுக்கும் வைசாலி மாவட்ட விவசாயிகளுக்கும் இடையேயான நிலத் தகராறில் 13 விவசாயிகள் கொல்லப்பட்டனர்.

கங்கை ஆற்றில் இருந்து இதுவரை 4 உடல்கள் மீட்கப்பட்டன.

### தேசிய ஜனநாயகக் கூட்டணியில்
# ம. தி. மு. க. மற்றும் பா.ஜ.கவுக்கு சமமான தேர்தல் தொகுதிகள்

சென்னை, மார்ச் 20

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ம.தி.மு.கவுக்கு எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் 21 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தி.மு.க. தலைவர் கருணாநிதியும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமியும் இதற்கான உடன்படிக்கையில் நேற்று முன்தினம் கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி—

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பல புதிய கட்சிகள் இணைந்திருப்பதாகவும்—

அதனால் பாரதிய ஜனதாவுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருந்த 23 இடங்களில் இரண்டை விட்டுக்கொடுக்க அந்தக் கட்சி முன்வந்துள்ளதாகவும்— தெரிவித்தார்.

கூட்டணியில் இரண்டாவது பெரிய கட்சி அங்கீகாரம் ம.தி.மு.கவுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் ஒரே சமயத்தில் கிடைக்கவே இப்படிச் செய்யப்பட்டதா என்ற கேள்விக்கு பதிலளித்த கருணாநிதி, கூட்டணியில் சகல கட்சிகளும் சமமாகவே கருதப்படுவதாகத் தெரிவித்தார்.

கடந்த மாநிலத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இரண்டாவது இடம் ம.தி.மு.கழகம் பெற்றிருந்தது. சமீபத்தில் பாரதிய ஜனதாக் கூட்டணியில் இரண்டாவது இடம் தனக்கு வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது. இதனையடுதது ம. தி. மு. கவுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் கூட்டணியில் இரண்டாவது பெரிய கட்சி என்ற அங்கீகாரத்தைப் பெறுவதில் போட்டி ஏற்பட்டது.

தற்போது, இரு கட்சிகளுக்கும் சமமான தொகுதிகளை கொடுத்து பிரச்சினையை கருணாநிதி சுமுகமாகத் தீர்த்து வைத்துவிட்டதாகத் தி.மு.க. வட்டாரத்தில் கூறப்படுகிறது.

## தமிழக அரசியலில்...

### தி.மு.க. கூட்டணியில் சேர்ந்த
## சிதம்பரத்தின் அமைப்புக்கு மூன்று தேர்தல் தொகுதிகள்

சென்னை, மார்ச் 20

தி. மு. க. கூட்டணியில் சேர்ந்துள்ள த. மா. கா. ஜனநாயகப் பேரவைக்கு எதிர்வரும் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் 3 தொகுதிகளை ஒதுக்கியிருப்பதாக தமிழக முதல்வரும், தி. மு. க. தலைவருமான கருணாநிதி தெரிவித்தார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் இந்தத் தகவலை அவர் கூறினார்.

த. மா. கா. ஜனநாயகப் பேரவையின் வேட்பாளர்கள் தி. மு. கவின் உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிடுவார்கள் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

தமிழ் மாநில காங்கிரஸ் அ. தி. மு. கவுடன் கூட்டணி அமைத்ததுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, த. மா. காவிலிருந்து வெளியேறிய முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் த. மா. கா. ஜனநாயகப் பேரவையை ஆரம்பித்தது தெரிந்ததே. (ஒ)





சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதி வழங்கக் கோரி வடமராட்சிப் பகுத மீனவர்கள் பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக நேற்று மறியற் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் கே.சூரியகுமாரன் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் மகஜரைக் கையளிக்கும போது எடுக்கப்பட்ட படம். அருகில் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கமும் வர்த்தகர் கே.அருணாசலமும் காணப்படுகின்றனர். மறியற போராட்டம் நடத்திய மீனவர்களும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசாமியும் படை அதிகாரியுடன் கலந்துரையாடுவதை மற்றைய படத்தில் காணலாம்.

(படங்கள்:-வடமராட்சி செய்தியாளர்)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 18 ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### நெடுந்தீவு

| | | |
|---|---|---|
| (14739ஏ) | (14739பி) | (14740ஏ) |
| (14740பி) | (14744ஏ) | (14745ஏ) |
| (14775ஏ) | (14793ஏ) | (14793பி) |
| (14793சி) | (14798ஏ) | |

### ஊர்காவற்றுறை

| | | |
|---|---|---|
| (14815எவ்) | (13840ஏ) | (13840பி) |
| (14151ஏ) | (14624ஏ) | (14466ஏ) |
| (14666பி) | (14705டி) | (14706ஏ) |
| (14706பி) | (14730ஏ) | (14730பி) |
| (14730சி) | (14730டி) | (14730ஈ) |
| (14732ஏ) | (14734ஏ) | (14734பி) |
| (14737ஏ) | (14737பி) | (14737சி) |
| (14737டி) | (14757ஏ) | (14757பி) |
| (14757சி) | (14757டி) | (14758ஏ) |
| (14759ஏ) | (14759பி) | (14766ஏ) |
| (14766பி) | (14766சி) | (14771ஏ) |
| (14772ஏ) | (14772பி) | (14777ஏ) |
| (14796ஏ) | (14804ஏ) | (14804பி) |
| (14809ஏ) | (14809பி) | (14809சி) |
| (14810ஏ) | (14810பி) | (14810சி) |
| (14812ஏ) | (14812பி) | (14812சி) |
| (14815ஏ) | (14815பி) | (14815சி) |
| (14815டி) | (14815ஈ) | (14815எவ்) |
| (14815ஜி) | (14818ஏ) | (14821ஏ) |
| (14827ஏ) | (14829ஏ) | (14852ஏ) |
| (14857ஏ) | (14865ஏ) | (14866ஏ) |

### வேலணை

| | | |
|---|---|---|
| (14534ஏ) | (14534பி) | (14534சி) |
| (14595ஏ) | (14604ஏ) | (14705ஏ) |
| (14705பி) | (14705சி) | (14710ஏ) |
| (14710பி) | (14710சி) | (14710டி) |
| (14710ஈ) | (14712ஏ) | (14712பி) |
| (14712சி) | (14712டி) | (14712ஈ) |
| (14724ஏ) | (14748ஏ) | (14767ஏ) |
| (14767பி) | (14767சி) | (14773ஏ) |
| (14782ஏ) | (14782பி) | (14782சி) |
| (14783ஏ) | (14783பி) | (14785ஏ) |
| (14785பி) | (14786ஏ) | (14794ஏ) |
| (14795ஏ) | (14796பி) | (14800ஏ) |
| (14800பி) | (14801ஏ) | (14801பி) |
| (14802ஏ) | (14813ஏ) | (14817ஏ) |
| (14819ஏ) | (14822ஏ) | (14822பி) |
| (14822சி) | (14825ஏ) | (14835ஏ) |
| (14835பி) | (14835சி) | (14844ஏ) |
| (14844பி) | (14844சி) | (14846ஏ) |
| (14849ஏ) | (14849பி) | (14851ஏ) |
| (14863ஏ) | | |

19 ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின விவரம்:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (181791ஏ) | (181791பி) | (181791சி) |
| (184393ஏ) | (185790ஏ) | (185790பி) |
| (185790சி) | (185790டி) | (185850ஏ) |
| (185935ஏ) | (185950ஏ) | (185950பி) |
| (186070ஏ) | (186070பி) | (186126ஏ) |
| (186238ஏ) | (186264ஏ) | (186279பி) |

### ஊர்காவற்றுறை

| | | |
|---|---|---|
| (14586ஏ) | (14731ஏ) | (14731பி) |
| (14762ஏ) | (14762பி) | (14762சி) |
| (14762டி) | (14762ஈ) | (14765ஏ) |
| (14765பி) | (14770ஏ) | (14805ஏ) |
| (14859ஏ) | (14859பி) | (14859சி) |
| (14869ஏ) | | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (184500ஏ) | (184500பி) | (184500சி) |
| (184642ஏ) | (186269ஏ) | (186270ஏ) |
| (186271ஏ) | | |

### வேலணை

| | | |
|---|---|---|
| (14716ஏ) | (14716பி) | (14791ஏ) |
| (14816ஏ) | (14824ஏ) | (14824பி) |
| (14824சி) | (14824டி) | (14833ஏ) |
| (14837ஏ) | (14837பி) | (14837சி) |
| (14856ஏ) | | |

(க-10)

# மிதிவெடியில் மாணவர் ஒருவர் காலை இழந்தார்; மற்றவர் காயம்

## புத்தூர் மேற்கில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

புத்தூர் மேற்கில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் சிக்கி இரு பாடசாலைச் சிறுவர்கள் காயமடைந்தனர்.

மிதிவெடியில் சிக்கிய புத்தூர் மேற்கைச் சேர்ந்த இராமராசு ரமணரூபன் (வயது 12) என்ற தரம் 6 மாணவனின் வலது கால் துண்டிக்கப்பட்டுள்ளது. அருகில் நின்ற இராசதுரை சந்திரகுமார் (வயது 12) என்ற மற்றைய தரம் 6 மாணவனும் காயமடைந்தார்.

பாடசாலைக்குச் செல்வதாக பெற்றோரிடம் கூறிவிட்டு உறவினர்களுடன் புத்தூர் மேற்கு வயல்வெளிப் பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-6-5)

# ஆறுமுகம் தொண்டமானை கொல்லப் புலிகள் திட்டமாம்!

கொழும்பு,மார்ச்20

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானை படுகொலை செய்வதற்கு புலிகள் தீட்டியிருந்த திட்டம் அம்பலத்துக்கு வந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நுவரெலியா பொலீஸாரினால் கடந்த செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி கைதான ஜோசப் செல்வரட்ணம் எனும் இளைஞனின் வாக்குமூலத்திலிருந்து இவ்விடயம் வெளியாகி உள்ளதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பூண்டுலோயா - தவலன் தன்னை தோட்டத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் தொழிலாளியாக வேலை செய்த இந்த இளைஞர் திருகோணமலை இருதயபுரத்தைச் சேர்ந்தவர்.

கைதாவதற்கு ஆறுமாதங்களுக்கு முன்னர் ஓர் அருட் சகோதரியினால் மேற்படி தோட்டத்திற்கு அழைத்துவரப்பட்டதாகப் பொலீஸ் தெரிவித்துள்ளது.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் வேவண்டன் இல்லத்தில் தொழில் புரியும் இரு பணியாளகளை சந்தித்து இவ் இளைஞர் உரையாடியுள்ளார். இவ்விருவரையும் பொலீஸார் விசாரித்து வருகின்றனர்.

அமைச்சரின் நடமாட்டம் குறித்து புலிகளுக்குத் தகவல் கொடுக்கும் பொறுப்பு இவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும் அதன் பின்னர் தற்கொலையாளிகளை அனுப்பி அமைச்சரைக் கொல்வதே புலிகளின் நோக்கமாக இருந்தது என்றும் விசாரணைகள் மூலம் அம்பலமாகியுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

(ம)

## 1982 - 89 ஆம் ஆண்டுக்குரிய சேவையில் இணைந்த

# ஆசிரியரின் நியமனக் கடிதங்கள்; பதிவு செய்வதற்கு வசதி

யாழ்ப்பாணம்,மார்ச்20

1982 ஆம் ஆண்டுக்கும் 1989 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆசிரியர் நியமனம் பெற்று இதுவரை நிரந்தர நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் யாழ்.கல்வி வலய அலுவலகத்தில் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சின் 8/51 ஆம் இலக்கமும், 05.02.2001 ஆம் திகதியுமிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக இந்த விவரங்கள் பதிவு செய்யப்படுவதாகவும் -

பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இந்தப் பதிவுகளுக்கென ஆசிரியர்கள் கல்வி வலய அலுவலகத்துக்கு சமுகமளிக்க வேண்டுமெனவும் - கேட்கப்பட்டுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் நியமனவகை, கடமையேற்ற திகதி, முதல் நியமனம் பெற்ற பாடசாலை, வலயம், மாவட்டம், பெயர் மாற்றம் ஏற்பட்டிருப்பின் தற்போது பாவனையிலுள்ள பெயர் ஆகிய விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிவுகள் படிப்படியாக ஏனைய கல்வி வலயங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் தபஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

(க-7)

# 'பவுசர்கள்' இருந்தும் பயனில்லை

வலி.தென்மேற்கு,மார்ச்20

வலி. தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபைக்கு குடிதண்ணீர் மற்றும் கழிவகற்றும் தேவைகளுக்காக வழங்கப்பட்ட பவுசர்கள், 'டிராக்டர்' இன்மையால் பாவனையின்றி உள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பிரதேச சபையின் தேவை கருதி பவுசர்களை வழங்கிய போதும் கடந்த நான்கு மாதங்களாக அவை தேடுவாரின்றி கிடக்கின்றன. (க-185)

## மணல் அள்ளத் தடையால் பாதிப்பு:

# ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள் குழு அரச அதிகாரிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம்,மார்ச்20

நாகர் கோயில் பகுதியில் மணல் அள்ளுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளர் கேமணி பல்லவராஜன் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

ஈ.பி.டி.பி. வெளியிட்ட செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகர் கோயில் பகுதியில் மண் அள்ளுவதற்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக குடாநாட்டில் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யும் பணி இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே ஈ.பி.டி.பி. அமைப்பின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் அரச அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகவும் -

அடுத்த ஓரிரு தினங்களில் இது குறித்து சாதகமான பதிலைத் தருவதாகத் தமக்கு அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் எனவும் -

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் பழைய மாணவரும்
சொக்கன் மணி விழாச் சபையின் முதல்வரும்
யாழ். கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியுமாகிய
உயர்திரு. திருநாவுக்கரசு கமலநாதன்
அவர்கள் கலாநிதிப் பட்டம்
பெற்றுயர்வடைந்தமைக்காகப் பாராட்டுவதுடன்
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை. யாழ்ப்பாணம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(85649)



## யா/கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின்

## அதிபர் அலுவலகம் - செயற்பாட்டறைத் திறப்பு விழா

காலம் :- நாளை (21-03-2001) புதன்கிழமை மு.ப 9.30 மணி (இ.நே)

தலைவர் :- திரு.வி.என். விஜயகுமார் - அதிபர்

பிரதம விருந்தினர் :- திரு. க.மணிபல்லவராஜன். (ஜே.பி.யூ.எம்.)
(தலைவர், நல்லூர் பிரதேச சபை)

சிறப்பு விருந்தினர்கள்: திரு.யோ.ரவீந்திரன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திருமதி க.சுப்பிரமணியம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

கௌரவ விருந்தினர்கள்: திரு.M.S. தயாளன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)
திரு.துரை தவராசா J.P.
(உப தலைவர், நல்லூர் பிரதேச சபை)

ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர் அவர்களும் பாடசாலைச் சமூகமும்.

யா/கலட்டி மெ.மி.த.க.பாடசாலை (85643)


# மரண அறிவித்தல்

## சாமி ஆச்சாரி-இசக்கிஆச்சாரி

யாழ். இந்துக்கல்லூரி வீதியில் வசிக்கும் சாமிஆச்சாரி-இசக்கி ஆச்சாரி (19.03.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இ.பிச்சம்மா அவர்களின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*74, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

(85657)

# ஏட்டிக்குப் போட்டியாக நேற்று இயங்கிய மாநகர சபை தாய் சேய் நிலையங்கள்!

## வரியிறுப்பாளர்கள் சினமும் கவலையும்!!

யாழ்ப்பாணம்,மார்ச்20

கடந்த ஒரு வாரகாலமாக செய லிழந்திருந்த யாழ்.மாநகரசபையின் தாய் சேய் சிகிச்சை நிலையங்கள் நேற்று இரு பிரிவுகளாக இயங்கின!

இரண்டு தரப்புக்களும் ஏட்டிக்குப் போட்டியாக சிகிச்சை நிலையங்களை நடத்தியமை, நகர வரியிறுப்பாளர்களின் ஏளனத்துக்கு ஆளானது மட்டுமன்றி, அவர்கள் மத்தியில் ஒரு புறத்தில் சினத்தையும் மறுபுறத்தில் கவலையையும் தோற்றுவித்துள்ளது.

யாழ்.மாநகரசபை நிர்வாகத்தினருக்கும் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.தெய்வேந்திரனை மாநகர ஆணையாளர் இராசா தணிகாசலம் கட்டாய லீவில் செல்லப் பணிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து மாநகர சபையின் வைத்திய அதிகாரியாக டாக்டர் கே.பிரதீபன் நியமனம் செய்யப்பட்டார்.

நேற்று டாக்டர் கே.பிரதீபன் தலைமையில் யாழ்.மடத்தடி யுபிலி மகப்பேற்று விடுதியில் தாய் சேய் சிகிச்சை நடைபெற்ற அதேவேளை டாக்டர் இ.தெய்வேந்திரன் தலைமையில் பிலிப்ஸ் ஞாபகார்த்த வைத்தியசாலையில் தாய் சேய் சிகிச்சைகள் நடத்தப்பட்டன.

### தடுத்து நிறுத்தப்பட்டனர்

யுபிலி மகப்பேற்று விடுதிக்கு சிகிச்சை பெறுவதற்கு வந்தவர்கள் சிலரால் தடுத்து நிறுத்தப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் குற்றஞ்சாட்டின. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. இதேவேளை டாக்டர் கே.பிரதீபன் சிலரால் எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. அதனையும் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

### நிலையங்களுக்கு "சீல்"

இது இவ்வாறிருக்க யாழ்.மாநகர சபையின் கீழ் இயங்கும் டாக்டர் இ.தெய்வேந்திரனால் நடத்தப்பட்ட கீரிப்பிள்ளையார் மகப்பேற்று விடுதி, கந்தர்மடம் கிளினிக் நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம் போன்றவை நேற்று மாநகர சபை அதிகாரிகளினால் "சீல்" வைக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டதாக அறியவந்தது.

இதேவேளை-

யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கட்டமைப்பு மாற்றப்பட்டமை குடும்பநல உதவியாளர்கள் இருப்பத்தியாறு பேரின் சம்பளம் வழங்கப்படாது நிறுத்தப்பட்டமை சீருடை வழங்கப்படாமை பிரயாணப்படி நிறுத்தப்பட்டமை ஆகிய செயற்பாடுகளால்-அவற்றுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலேயே- தாம் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் பணிக்கு செல்லவில்லை என்று குடும்ப நலன் பணியாளர் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

எனினும்-

பிரதி மேயர் செல்லன் கந்தையன் கடந்த சனிக்கிழமை நடத்திய கூட்டத்தில் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தே தாம் வழமை போல் நேற்றுக் கடமைகளில் ஈடுபட்டதாக குடும்ப நலப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

### பிரதி முதல்வர் தகவல்

இதேவேளை-

யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் 26 குடும்ப நல சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று சபையின் பிரதி முதல்வர் செ.கந்தையன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

சம்பளம் வழங்குவதற்கான ஒழுங்குகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரை எவரும் வந்து பெற்றுக்கொள்ளவில்லை என்றும்-

இவர்களுக்குரிய சீருடைகளும் வழங்கப்படவுள்ளதுடன் பிரயாணப்படி தொடர்பாக மேயர் என்.ரவிராஜ் யாழ்ப்பாணம் வந்ததும் முடிவு செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-5-10)

## வவுனியாவில் சரக்கு ரயில் தடம்புரண்டது

வவுனியா, மார்ச்20

வவுனியா ரயில் நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் சரக்கு ரயில் ஒன்று தடம்புரண்டது.

மூன்று பெட்டிகளும், என்ஜினும் சேதத்துக்குள்ளாகின.

இந்த விபத்தை அடுத்து பாதிக்கப்பட்டுள்ள கொழும்புக்கான ரயில் சேவையைச் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-3)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று - அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மனுத் தொடர்பாக நெதர்லாந்து நீதி அமைச்சு ஆராய்ந்து வருவதாக சர்வதேச ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இதேவேளை -

நேற்று முன்தினம் நெதர்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அங்கிருந்து லண்டனுக்குப் புறப்பட்டார். (க-3-7)

## தெருக்கூத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி ரோந்தில் ஈடுபட்ட படையினர் பிரஸ்தாப நான்கு இளைஞர்களையும் கைது செய்ததுடன் தெருக்கூத்து நடத்துவதற்கும் தடை விதித்தனர். (க-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் உள்ள படையினரின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் 120 மி.மீ.மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் -

அதேதினம் சாவகச்சேரியில் சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் சிக்கிக் காயம் அடைந்தார் என்றும் - தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (க-3)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரிபுரபவன்,சரண்யா நரேந்திரன்) 9டி - 12 பேர், 8டி - 24 பேர்.

★ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி:- 9டி - 6 பேர், 8டி - 4 பேர்.

★ யாழ்.இந்து:- 10டி - 4 பேர் (செல்லத்துரை பிரசாத், யோதிந்திர சர்மா சிவராமசர்மா, கோபாலகிருஷ்ண ஐயர் சுதர்சன், சிவஞானசுந்தரம் உமைபாலன்), 9டி - 13 பேர், 8டி - 16 பேர்.

★ சென்.ஜோன்ஸ்:- 10டி - 5 பேர். (தவபாலன் பவானந்த், சிவராஜன் கிர்வாசன், சத்தியமூர்த்தி சததிருபன, விமலகாந்தன் தனுசன், இராமநாதன் தேவமாறன்).

★ கொக்குவில் இந்து:- 8டி - 3 பேர்.

★ யாழ்.இந்து மகளிர்:- 9டி - ஒருவர்.

★ சென்.பற்றிக்ஸ்:- 9டி - ஒருவர், 8டி - 2 பேர்.

★ சாவகச்சேரி இந்து:- 10டி - 2 பேர் (செல்லையா ஐங்கரன், கந்தசாமி ஜனார்த்தனன்), 9டி - 7 பேர், 8டி - 4 பேர்.

★ வட.இந்து மகளிர்:- 10டி - 2 பேர் (அபிராமி சண்முகதாஸ், மேகலா சுப்பிரமணியம்).

★ சென்.ஹென்றிஸ்:- 8டி - ஒருவர்.

★ யாழ்ப்பாணக் கல்லூரி:- 10டி 2 பேர் (சுகுணா முருகதாசன், துசித்திரா டானியல் வசந்தகுலமலர் குரோஸ்), 9டி - 2 பேர், 8டி - 3 பேர்.

★ புற்றளை ம.வி.:- 9டி - ஒருவர்.

★ சுன்னாகம் இராமநாதன் கல்லூரி 10டி - ஒருவர் (இராமச்சந்திரன் கார்த்திகா).

★ வல்வை மகளிர்:- 10டி - ஒருவர் (குணராஜ் சுதர்சினி).

★ விடத்தற்பளை கமலாசினி:- 9டி - இரண்டு பேர்.

★ விக்டோறியாக் கல்லூரி:- 8டி- 2 பேர்.

★ யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்:- 8டி - 2 பேர்.

★ மானிப்பாய் இந்து:- 9டி - ஒருவர், 8டி - 2 பேர்.

★ கரவெட்டி விக்னேஸ்வரா:- 10டி- ஒருவர் (சிவராமலிங்கம் குமரேசன்).

★ வட.மத்தி மகளிர் கல்லூரி:- 9டி - ஒருவர், 8டி - ஒருவர்.

★ வயாவிளான் ம.ம.வி.:- 8டி - 2 பேர்.

★ இளவாலை கன்னியர்மடம்:- 9டி - ஒருவர்.

★ இணுவில் மத்திய கல்லூரி:- 9டி - ஒருவர்.

★ ஹாட்லி:- 9டி - 7பேர், 8டி - 13 பேர்.

★ கொழும்புத்துறை இ.ம.வி:- 8டி - ஒருவர்.

★ சந்திர மௌலீச வித்தியாலயம், சாவகச்சேரி:- 9டி -ஒருவர்.

★ சங்கானை சிவப்பிரகாச ம.வி.:- 8டி - ஒருவர்.

★ சாவகச்சேரி மகளிர் ம.வி.:- 8டி - ஒருவர்.

★ மகாஜன கல்லூரி:- 9டி - 2 பேர், 8டி - 3 பேர்.

★ உடுவில் மகளிர்:- 10டி - ஒருவர் (அற்புதராஜா அனுசா).

★ யூனியன் கல்லூரி 10டி - ஒருவர் (விசுவசீத் பிரியா), 9டி - 2 பேர், 8டி - 2 பேர்.

★ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை:- 10டி- ஒருவர் (இராதாகிருஸ்ணன் பிரியதர்சினி), 9டி - 4பேர், 8டி - 5பேர்.

இதேவேளை -

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகளை இவ்வார இறுதியில் யாழ்.எடுத்துவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (க-7)

## புலிகளின் விருப்பத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் உறுதிப்பாட்டைக் கொண்டு வர முயற்சிக்கிறேன்.

விடுதலைப் புலிகளுடன் இடம் பெறும் பேச்சுக்களில் அவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண முன்வந்து அதற்கு இணக்கம் தெரிவித்தால் -

ஏற்கனவே முன்வைத்த அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளை அவர்களின் விருப்பம் பிரதிபலிக்கத்தக்க வகையில் கூடுதல் வலுவைக் கொண்டதாக மாற்றவும் தயாராக இருக்கிறேன் - என்றார்.

'நாட்டு மக்கள் சமாதானத்தை நாடி நிற்கிறார்கள். எனது தாய் நாட்டுக்கு உடன் தேவை சமாதானமே' என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (க-3)

## 9 வாக்குகளால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோ, தமிழ்க்காங்கிரஸ் ஆகியன எதிராக வாக்களித்தன.

சிஹல உறுமய உறுப்பினர் திலக் கருணாரத்ன சபையில் சமுகமளித்திருந்த போதும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. (க-3)


இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
'காதலர் தினம்' புகழ்
குணால், கரன்
நடித்த
பார்வை ஒன்றே போதுமே
(இந்தத்திரைப்படப் போஸ்டர்கள் உண்டு)
உடன் பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.
பழைய புதிய போஸ்டர்கள்
வாடகைக்கும்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு வீடியோ
K.K.S.Road, கோண்டாவில்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
குணால், கரன்,மோனல்
நடித்த
பார்வை ஒன்றே போதுமே
பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.
பிரமிட் & FIVE STAR வெளியீடு
❊உள்ளம் கொள்ளை போகுதே
❊ரிஷி
❊மின்னலே
❊தாலிகாத்த காளியம்மன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
பார்வை ஒன்றே போதுமே
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
அஜந்தா கொம்யூனிகேஷன்ஸ்
15,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடுகள்
குணால், கரன், மோனாலி
நடிப்பில
பார்வை ஒன்றே போதுமே
ANOLD நடித்த
2037
CENTURION FORCE
(ஆங்கிலத் திரைப்படம்)
வீடியோ ஆனந்த் ஸ்ருடியோ
யாழ் வீதி, மானிப்பாய்.
T.P.2889 (85646)

க.பொ.த. சாதாரண பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் கவனத்துக்கு!
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண பரீட்சை முடிவுகளை நீங்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள உங்களது பெயர், சுட்டெண்ணுடன் தொடர்பு கொள்ள:
வேணு கொமினிக்கேசன்
கெருடாவில், தொண்டமனாறு. T.P.070-212602
ராஜா கொமினிக்கேசன்
சந்தை வீதி, உடுப்பிட்டி. T.P.070-212297, 070-212402

விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி றோட், யாழ்.
O/L DAY CLASS
பிரிவு 2 ஆரம்பம்:-22-03-2001
(8.30 -2.00)
இவ் வருடம் 6 பிரிவுகள் மட்டுமே ஆரம்பிக்கப்படும்.
(85575)

க.பொ.த. சாதாரண பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் கவனத்துக்கு!
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண பரீட்சை முடிவுகளை நீங்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள உங்களது பெயர், சுட்டெண்ணுடன் தொடர்பு கொள்ள:
அம்பாள் தொலைத் தொடர்பு நிலையம்
கம்பஸ்லேன் திருநெல்வேலி. T.P.2742

JAFFNA TECHNICAL INSTITUTE · SRI LANKA
இறுதிப் பரீட்சை
எமது நிறுவனத்தில் தொழிற்பயிற்சிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதால் சகல மாணவர்களையும் 24.03.2001 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
குறிப்பு:- முன்னர் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களும் மற்றும் பரீட்சைக்குத் தோற்றவேண்டிய மாணவர்களும் அனுமதி அட்டையுடன் தொடர்பு கொள்ளவும்.
நிர்வாகி
J.T.I.
(C/15797)


## மரண அறிவித்தல்

### திருமதி தவமலர் துரைராஜா

அல்வாய் தவமகாலைச் சேர்ந்த திருமதி தவமலர் துரைராஜா நேற்று (19.03.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நடேசு துரைராஜா (**J.P.** - ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், விவாகப் பதிவாளர் - வடமராட்சி) அவர்களின் அன்பு மனைவியும், கிருஸ்ணபிள்ளை (செட்டியார்) - தங்கப்பெண் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடேசு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், ரமேஸ்(பொறியியலாளர் - கனடா), மேகலா, சுரேஸ் (கனடா), சதீஸ் (பொறியியலாளர் - கொழும்பு), காலஞ்சென்ற ஜமுன ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்கினேஸ்வரன் (லண்டன்), றதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வெற்றிவேல் (அதிபர் - கொற்றாவத்தை தமிழ்க் கலவன் பாடசாலை), செல்வரத்தினம் (கனடா), அரியநாயகம் (தே.ப.உ.வி.கூ.சங்கம்) ஆகியோரின் மைத்துனியும், பற்மராஜன் (ஆசிரியர், ஞானசாரியார் கல்லூரி - கரவெட்டி), திருமகள் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நிருத்திகா, துசியந்தன், இந்துஜன், சசீத்தா, வினோதினி, திவ்வியா ஆகியோரின் பெரிய தாயாரும், நிலானி (நெல்லியடி வட மத்திய மகளிர் கல்லூரி மாணவி), நிசானி (நெல்லியடி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி), நிருசன், கீதன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த.துரைராஜா
(கணவர்)

தவமகால்,
அல்வாய்.

(C/15805)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.